REGD 4642 M

திராவிடநாடு

16 பக்கம்

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 29-1-50

எந்த நினைவால்?

[மான்]

வெட்டவரும் கூர்வாளோ நாட்டின்சட்டம்
விளையாட்டுப பொம்மைகளோ அரசினர்க்கு?

முட்டவரும் மாடோ; இல்லை, முன்னேற்றத்தை
முறியடிக்கும் அமைப்புத்தானோ? ஆட்சியாளர்

சுட்டெரிக்கும் பெருநெருப்பாய் அடக்குமுறை
சுறுசுறுப்பாய் செய்வதெலாம், சுயநலத்தின்

கட்டிடங்கள் சரியவரும் புயலைச்சட்டக்
குடைமறைப்பால் தடுத்துவிடும் நினைவால்தானோ?

விட்டெறிந்த கூர்வேலாய் ஏழைவாழ்வை
விழலாக்கும் ஓர் அமைப்பா நாட்டின்சட்டம்?

மட்டிறந்த துயர்த்தீயில் மடிவார்தம்மை
மகிழ்விக்க சட்டமில்லை! ஆட்சியாளர்

காட்டாறாய் மக்கள்நலம் தன்னில்பாய்ந்து
அறிவூற்றை இருட்டடிக்கச் செய்வதெலாம்

நாட்டாரில் "நமைக்கேட்க யாருமில்லை
நம்பேச்சே சட்டமெனும்" நினைவால்தானோ?

பொங்கிற்று

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாவது திருப்தியாகச் சாப்பிடட்டும் என்கிறான் அவன். மனைவியைப் பார்க்கிறான். சரியான ஆகாரமில்லாமல் நாளுக்கு நாள் அவள் எலும்புந்தோலுமாய் இளைக்கும் கண்ணராவியைப் பார்க்கிறான். அப்போது அவன் மனம் கூறுகிறது—உழுதோம் விதைத்தோம். நாற்றுப்பிடுங்கினோம் நடவு நட்டோம். பயிரை வளர்த்தோம். பாதுகாத்தோம். அறுத்தோம். அடித்தோம். வண்டி வண்டியாய்க் கொண்டுபோய் வீடு சேர்த்தோம். அந்த நெல் மூட்டைகளை இரண்டுபங்கு விலைக்கு பிளாக் மார்க்கெட்டில் விற்கிறார். நாமும் நமது குடும்பமும் காலவயிற்றுக் கஞ்சி குடித்துக் காலத்தைக் கடத்துகிறோம். வாழ்நாள் முழுதும் நாம் பாடுபடுகிறோம். வயல் எங்கிருக்கிறதென்றுகூட அவருக்குத் தெரியாது. ஆனால் வளமாக வாழ்கிறார் அவர். வயிற்றுச் சோற்றுக்கு நாம் திண்டாடுகிறோம். ஏன் இந்நிலை என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்ளுகிறான். குழந்தைகளைப் பார்க்கிறான். தன்னுடலைப்பார்த்துக் கொள்ளுகிறான். சேறுபாதி உடலைத் தின்று விட்டது. சோறு இல்லாமல் வேறு உடல் மெலிந்து விட்டது. இன்னும் கால் உடல் எத்தனை நாளைக்கோ. ஆண்டவனே? கூடிய சீக்கிரம் என்னைக் கொண்டு போய் விடு எனப் பிரலாபிக்கிறான் பெருமூச்சுடன். அவனையறியாமலேயே, அவன் கண்களிலிருந்து பொங்கி வழியும் கண்ணீரை, அவன் கைகள் துடைக்கின்றன.

பொங்கல் விழா முடிந்துவிட்டது. எனினும், பொங்கல் எத்தனையோ இல்லங்களில் இப்படியிருந்திருக்கும் அந்த இல்லங்களில் வாழ்விலோர் திருநாளான அன்று களிப்புப்பொங்கியிருக்காது! கண்ணீர் தான் பொங்கியிருக்கும்!! கண்ணீர் மறைந்து, எங்கும் களிப்பு பொங்கும் நாள் என்று வரும்? எப்போது வரும்?

✲

14-ம் பக்கத்தொடர்ச்சி

தின் மத்தியில் சீரழிவு! இதுதான் இன்றைய அமெரிக்க நாகரிகத்தின் உண்மையான படப்பிடிப்பு.

புதிய குடியரசின் மூலகர்த்தர்கள் ஆங்கிலமோகத்தில் அலுத்துப் போய், அமெரிக்க அரவணைப்பில் ஆசைகொண்டு திரிகிறார்கள். அமெரிக்கர்களும் கடைக்கண் வீசுவதில், தவறவில்லை.

டாலர் மூலதனத்தை வரவேற்று அமெரிக்கர்கள் விதித்த நிபந்தனைகள் அத்தனையும் பூர்த்தி செய்ய வழி வகுத்துப் புதிய அரசியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

பூலோக சுவர்க்கம் என்று போற்றப்படும் அமெரிக்காவில் கூட ஏழை—பணக்காரன் பேதம்ஒழியவில்லை! கிராமம்—நகரம் என்கின்ற வித்தியாசம் அழியவில்லை!

இந்நிலையில், அமெரிக்காவை அணைத்துமகிழும் இந்தியசர்க்காரோ ஏழையின் வாழ்வு, கிராமங்களின் சுபீட்சம் பற்றிப் பேசுகிறார்கள் — முழக்கமிடுகிறார்கள்! அதே நேரத்தில், அவர்கள் செல்லும் பாதை அவைகளை நிறைவேற்றும் 'புதுப் பாதையாகவில்லை; அமெரிக்கப் பாதையாகவே இருக்கிறது!

அமெரிக்க வாடை, ஆனந்தம் தராது! அல்லல்தான் தரும்!!

✲

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது. வைரக் கடுக்கன் சாட்சி சொன்னார், 'டீ' குடித்தது, அதைத் தான் பார்த்தது ஆகிய விஷயங்களை! அதோடு, "சார்! இதுபோலத் திருட்டுப் பசங்களை விடக்கூடாது. ஐயோ, பாவம்னு இறங்கினா விஷயம் விபரீதமாப் போய்டும். இதையெல்லாம் உடனுக்குடனே நறுக்கிடணும் — இல்லாட்டீ வியாபாரமாவது, வேடிக்கையாவது! ஒண்ணும் உருப்படாது—அப்புறம் இந்தப் பசங்க வச்சதுதான் சட்டம், அடிச்சது தான் கொள்ளை!" என்று உபதேசம் புரிந்துவிட்டு வெளியேறினார், ஒரு பெரிய காரியத்தைச் செய்துவிட்டோம் என்ற திருப்தியோடு, 'சில்க் சட்டை'யுடன் பேசிக்கொண்டு!

கந்தசாமி திகைத்தான், தேம்பினான், செய்வது குற்றம் என்பதை யுணர்ந்தான், எனினும் பசி அவனுடைய சபல நினைவைத் தட்டிவிட்டது! உண்மையைச் சொன்னான், 'விட்டுவிடுங்கள். நிச்சயம் நாளைக்கு கொண்டுவந்து தந்துவிடுகிறேன்' என்று கதறினான்!

கந்தசாமியின் கதறல் 'கல்லுச் சாமி'யிடம் அர்ச்சனை செய்வது
போல ஆயிற்றே ஒழிய, எந்தப்
னையும் தரவில்லை.

சில நிமிடங்கள் ஓடின. போ
காரர் ஒருவர் அழைத்து வரப்
டார்—அவரது அதட்டல்—
தையே, இழுத்துக்கொண்டு போ
சார்!' என்ற முதலாளியின் மு
யீடு—'போடா' என்ற போ
காரரின் கர்ஜனை......எல்லாம்
சாமியின் கண்ணில சலனப்
போல தெரிந்துகொண்டிருந்தன
நடந்துகொண்டிருந்தான்,
னால் போலீஸ்காரர் பின்தொ
'சோகம்' தள்ளாடிச் செல்வதுபோ
இருந்தது அவனது பரிதாபநிலை
'சாந்தி கபே' முதலாளி வழ
'............'தில், ஒரு சிகி
வாங்கி பற்றவைத்துக் கொ
வந்து கொண்டிருந்தார் போ
காரர். இன்று ஒரு கேஸ் கி
ந்தது, என்ற சந்தோஷம் அவரு
கந்தசாமியின் நினைவிலோ, க
பாயி, கணபதி அஞ்சு மூவ
கண்ணீருங் கம்பலையுமாய் நி
அழுதுகொண்டிருந்தனர்.

"நேற்றே அரிசியில்லையே...
னைக்கு......இனிமேல்......" அ
எண்ணினான். இரண்டு கண்க
குளமாயின, தேம்பித் தேம்பி
ஆரம்பித்தான்!

'ஏய். நடடா. என்ன வே
போடறே' போலீஸ் அதட்டி
தனது அதிகாரக் குரலுடன்.

கந்தசாமி திரும்பிப் பார்த்த
மின்சார விளக்கொளியில்,
கிருந்த சுவற்றில், பத்திரிகை
'போஸ்டர்' ஒட்டப்பட்டிருந்த
ஒரு முறை 'போஸ்டரை' பா
துக்கொண்டே நடந்தான்! அ
பின்வருமாறு பொறிக்கப்பட்டி
தது—கொட்டை எழுத்துக்களில்

"தொழிலாளி"

குடியரசு ஆரம்ப

✲

நேரு கர்ஜனை

✲

அழகான மலர் | 20 பக்கங்கள்

விலை அணா ஒன்று.

அன்று காலை, அவன் "கம்பா
செய்த எழுத்துக்கள் அவ
கண்டு சிரிப்பது போலிருந்தன

பொங்கிற்று

களிப்பல்ல; கண்ணீர்!

[வீ. சம்பந்தன்]

...லையிலே ஒருபெரியகூடை, அது ...யப் பொங்கல் வரிசை சாமான் ...கையிலே கரும்புகள். கனவேக ...நடந்து செல்கிறான் கந்தசாமி. ...ரவில் திரும்பவேண்டும். வீட் ...டல்ல; எஜமானரின் பங்களா ...கு! ஓடிவாடா? என்றுதான் உத் ...விட்டிருந்தார். எனவேவேகமாக ...க்கிறான். திரும்பி வந்து அவன் ...டிக்கவேண்டிய வேலைகள் திரண்டு ...க்கின்றனவே. ஆறுமைலிலுள்ள ...மானரின் மகள் வீட்டுக்கு வரி ...யாகச் செல்கிறது அக்கூடை! ...தைத்தான் தூக்கிக்கொண்டு ...கிறான்—போகிறானா — அல்ல— ...கிறான். அன்று மாலைவீடுதிரும்பு ...ன் கந்தசாமி மத்தியானம் ...ன் வரவில்லை என்று கேட்கிறாள் ...னவி. அவன் கூறுகிறான், 'முத ...ளியின் மகளுக்கு வரிசை எடுத் ...ச்சென்றேன்' ஒரு கணம் அவள் ...கம் சுருங்குகிறது இதைக்கேட்டு. ...வள் அவனைப்பார்க்கிறாள். அவன் ...வளுடைய வேதனை நிறைந்தபார் ...வையைப் பார்த்துத் தலைகுனிகி ...ன். இந்த வருடங்கூட ஒன்றும் ...ய்ய முடியவில்லையே என்று தழ ...ழுத்த குரலில் கூறுகிறாள். கூறும் ...போதே அவள் கண்கள் கலங்குகின் ...ன. அவர்கள் மகளை இரண்டு வரு ...த்திற்கு முன் பக்கத்து ஊரில் ...லியாணம் செய்து கொடுத்திருந் ...தார்கள். அவளுக்கு ஒரு வரிசை ...னுப்பக்கூட முடியவில்லையே என் ...றேங்குகிறாள் அவள். அதைக் கண்டு ...பெருமூச்செறிகிறான் கந்தசாமி. ...வன் வாய் பேசவில்லை. உள்ளத் ...திலே சோகம் பொங்குகிறது. உள் ...ளம் உரையாடுகிறது. அவன் கண் ...களிலிருந்து இருசொட்டுக்கண்ணீர் ...வழிந்தோடுகிறது.

* * *

இன்னும் இரண்டே நாட்கள் ...தானிருக்கின்றனஆடி, ஓடி வேலை ...செய்கிறான் ஆறுமுகம். உட்காரக்கூடச் சிறிது நேரம் இல்லை அவனுக்கு. அவ்வளவு மும்முரமாக மிராசுதாரரின் வீட்டைச் சுத்தஞ்செய்வதிலீடுபட்டிருக்கிறான். அவ்வளவு பெரிய வீட்டையும் அவன் ஒருவனே ஒட்டடை அடிக்கிறான், கழுவுகிறான். சுவற்றை மெழுகி, சுண்ணாம்பு பூசிச் சுத்தப் படுத்திவிட்டு, சோர்ந்து போய் வீடு திரும்புகிறான். அங்கே அவன் மனைவி, ஏன் இப்படிக்களைத்து வருகிறீர்கள்? வெளியூர் போயிருந்தீர்களா? என்ன? என்கிறாள். இல்லை, முதலாளியின் வீட்டிலே வேலை! ஒட்டடை அடித்துக் கழுவி, சுண்ணாம்புபூசிச்சுத்தம் செய்தேன். எவ்வளவு பெரிய வீடு இன்னொரு ஆளை வைத்துக்கொள்ளக் கூடாதா? அடேயப்பா ரொம்ப மோசம். வர வர இந்த மனுஷனுக்குக் காசாசை பிடிச்சுப்போச்சு. உயிரை வாங்கிட்டான் மனுஷன் என்று நொந்து கொள்கிறான். அவன் மனைவி அவனை ஒருமுறை பார்க்கிறாள். மறுமுறை குடிசையை மேலுங் கீழுமாகப் பார்க்கிறாள். பெருமூச்செறிகிறாள். குடிசை குருவிக்கூடு போலிருக்கிறது. கூரைக்குக்கீற்றுப் போட்டுப் பத்து வருடங்களுக்கு மேலிருக்கும். சூரியனும், சந்திரனும் வீட்டினுள்ளே விளையாடிக்களிக்கின்றனர். மழை பெய்தால் வீடு தெப்பமாகி விடும். அது மட்டுமல்ல. பின்புறச் சுவர், இப்போதோ இன்னுஞ் சிறிது நேரத்திலோ, வீழப் போகிறேன் என்று பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டும். அல்ல. வீட்டையே புதுப்பிக்க வேண்டும். ஆனால் அது இந்த ஜன்மத்தில் முடிகிறகாரியமா? வாங்கும் கூலிதான் வாழ்க்கைக்கே போதவில்லையே. இந்த நிலையில் இடிந்த வீட்டைப் புதுப்பிக்க இயலுமா அவனால். என்ன செய்வதென்று ஏங்குகிறான். ஏக்கம் எல்லை மீறுகிறது. நீண்டதோர் பெருமூச்சு, சோகத்துடன் கலந்து வெளிவருகிறது. அவன் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கிக் கன்னத்தில் வழிந்தோடுகிறது.

* * *

என்னிடம் கொடு.

முடியாது—எனக்குத்தான்.

கொடுக்கிறாயா, இல்லையா?

கொடுக்க முடியாது.

என்ன? முடியாதா? இதோ பார்!

ஆறு வயதுப்பையனை எட்டு வயதுப் பெண் அடிக்கிறாள். அவனோ ஓவென அழுகிறான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவள் தந்தை முத்தான் ஓடிவந்துஅப்பெண்ணின் முதுகில் இரண்டு அறை கொடுக்கிறான். கழுதை? இத்தனை வயதாகியும் உனக்குப் புத்தியில்லையே? அவன்தான் சின்னப் பயல் தின்றாலென்ன. அதற்காக அவனைப் போய் அடித்தாயே, என்று திட்டுகிறான். அவளும் ஓவென அழ ஆரம்பிக்கிறாள். ஒரு அழுகாலை தடுக்கப் போனது, இரண்டு அழுகாலை உண்டுபண்ணி விட்டது. சிறிது நேரங் கழித்து உணருகிறான். ஏன்? இப்படி முட்டாள்தனம் பண்ணி விட்டோம். எதற்காக அப்பெண்ணை அடித்தோம்? பெரிய பெரிய தலைவர்களை பதவி ஆசை காரணமாக சண்டை போட்டுக் கொள்ளுகிறார்களே, அப்படியிருக்க, சின்னஞ் சிறுசுகள் திங்கும் கரும்புக்குத்தானே சண்டை போட்டுக் கொண்டன என்று அவன் மனம் உறுத்தியது. இரும்புப் பெட்டியைப் பார்த்துப் பார்த்து இறுகிப்போன இருதயமல்லவே அவனுக்கு. இளகலான இருதயம் படைத்த இனத்தைச் சேர்ந்தவன்தானே அவன். மெல்ல அப்பெண்ணருகில் செல்கிறான்.

அழாதே அம்மா! நமது தம்பிதானே. தின்றுவிட்டுப்போகட்டுமே, என்று இருக்கக்கூடாதா? இதற்காக அவனைப்போய் அடித்தாயே. உனக்கு வேண்டுமென்றால் என்னைக் கேள். நான் வாங்கித்தருகிறேன். இனிமேல் இப்படிச் சண்டைபோடாதே என்று அவளுக்குப்புத்தி கூறிக்கொண்டே தனது மேல்

துண்டை எடுத்து அவள் கன்னத்தைத் துடைக்கிறான். ஆம். அவனுடைய முதலாளிக்குக் கரும்புத்தோட்டத்தைப் பண்படுத்தினான். கரும்பை நட்டான், வளர்த்தான், காவல்காத்தான். அவைகளை வெட்டிக் கொண்டு போய்ச் சந்தையிலே பணமாக்கினான். பாழும்பணம் முதலாளியின் இரும்புப்பெட்டிக்குள் ஓடி ஒளிந்துகொண்டது. முதலாளி வீட்டில் சர்வமும் கரும்புமயம். காலடி எடுத்துவைத்தால் கரும்பின் மீதுதான் வைக்கவேண்டும். ஆனால் இவ்வளவு பாடுபட்டு, பயிரிட்டு வளர்த்தான் கரும்பை. அவன் குழந்தைகள் ஒரு துண்டுக் கரும்புக்கு அடித்துக்கொள்ளும் நிலையைக் காண்கிறான். கல்மனம் படைத்தவனா அவன், இதைக்கண்டபிறகும் கவனியாதவன்போலிருக்க. சொல்ல முடியவில்லை, சோகம் பொங்கியெழுகிறது. அவனையறியாமலே அவன் கண்களில் கண்ணீர் சுரக்கிறது. அடஆண்டவனே! என்றைக்குத்தான் நமக்கு விடிவுகாலமோ என ஏங்கிப் பெருமூச்சு விடுகிறான்.

X X X

அதிகாலை தறிமேடையில் அமருகிறான் அப்பாசாமி. அந்தி மயங்கும் நேரத்தில் ஆவி சோர்ந்து எழுகிறான். அவன் மனைவி நூல் நூற்றுக்கொடுக்கிறாள். அவன் மகன் அவனுடன்கூட ஒத்துழைக்கிறான். ஏன் அவன் குடும்பமே நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறது. நெய்த துணிகளை விதவிதமான பட்டுப்புடவைகளைக் கொண்டுபோய் முதலாளி இடத்தில் கொடுக்கிறான். என்னப்பா அப்பாசாமி? மார்க்கெட் ரொம்ப "டல்"லாயிருக்கிறதே, இரண்டு நாளாய் சரக்கு வாங்குவதையே நிறுத்திவிட்டேன். விலையெல்லாம் திடீரென்று இறங்கிவிட்டது. ரொம்பக் கையைப் பிடிக்கும்போலிருக்கு இந்தச்சமயம் என்று முகாரி பாடுகிறார் முதலாளி.

இல்லிங்க, பொங்கல் சமயம். செலவுக்குக்கூடக் கையிலேகாசு இல்லிங்க, இந்தச்சமயம் நீங்க இப்படிசொல்லக்கூடாதுங்க. ஏதோ உங்களுக்கும் கட்டும்படியா, எனக்கும் கையைப் பிடிக்காம விலைபோட்டு எடுத்துக்குங்கோ, என கையைக்கட்டி, பல்லைக்காட்டிக் கெஞ்சுகிறான் அப்பாசாமி.

ஏதோ, அவன்கஷ்டத்தைக்கண்டு மனமிரங்குவதுபோல், சரி. அப்பாசாமி, நீ இவ்வளவு தூரம்சொல்லும்போது எனக்கே மனம்கேட்கவில்லை, 'இந்தாய்யா' கணக்கப்பிள்ளை அப்பாசாமியைக் கவனித்து அனுப்பு, என ஜாடைக்காட்டுகிறார். அவ்வளவுதான் தடுக்கிவிழுந்தால் படிக்குப்பாதி என்பார்களே, அதுபோல் அப்பாசாமியின் துணிகள் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. பணத்தைப் பெற்றுக்கொண்டு கிளம்புகிறான். அங்கே முதலாளியின் வீட்டிலே அவர்கள் நவநவமான, நாகரீக, டாம்பீக உடைகளணிந்து, காணப்படுகின்றனர். அதையும் பார்த்துவிட்டு வந்தவுடன் அதே கண்களால் தனது குடும்பத்தையும் பார்க்கிறான். கிழிந்த புடவையுடன் நிற்கும் மனைவி, ஒட்டைப் பாவாடையுடன் நிற்கும் ஒன்பது வயதுச்சிறுமி, முழத்துண்டு கட்டிக்கொண்டு குளிர் தாங்காமல் முனகும் தனது தகப்பன், ஒரு வேஷ்டியைத் துவைத்துத் துவைத்துக் கட்டும் தனது மகன் ஆகியோரைப் பார்க்கிறான். அதுமட்டுமல்ல, மத்தியானம் குளித்துவிட்டு மாற்று வேஷ்டிக்கு என் செய்வதென்று ஏங்குகிறான். அவனி முழுதுக்கும் ஆடை நெய்து அவன் கொடுக்கிறான். ஆனால் அவன் குடும்பம், அரைகுறை ஆடையுடன் காலந்தள்ளுகிறது, வேதனையால் விம்முகிறான், சோகக் கண்ணீர் உகுக்கிறான் "ஏமாற்றிவிட்டோமென்று எக்களிப்புக் கொள்கிறான் முதலாளி. எனக்குத்தெரியாதா? மார்க்கெட்எப்படியிருக்கிறதென்று. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை போல், இந்த ஊரிலே இவனை விட்டால், வேறு வழி ஏது. இதுதான் சமயமென்று இழுத்துப் பிடிக்கிறான். அடித்துப் பிடித்து விலையை அமுக்கி வாங்கிவிட்டான் படுபாவி. இப்படியெல்லாம் சம்பாதித்தால தானே பட்டுப் பீதாம்பரமணிந்து பகட்டாகக் காரில் போகலாம். எத்தனை நாளைக்குஇந்த வாழ்வு? என்று நொந்து கொள்கிறான். துக்கம் தொண்டையை அடைக்கிறது. கண்ணீர் பொங்கிக் கொண்டு வெளிவருகிறது.

* * *

அன்றுதான் பொங்கல். ஆ
அவன் வீட்டில் பொங்கல் இ
யாது. அவன் எங்கே போ
பொங்கல் கொண்டாட! அவ்
வசதி படைத்தவனா என்ன? ஆ
அலுத்துச்சலித்துப்போய்ப்படு
ருக்கிறான். என்னங்க. நாழிய
லியா. எசமான் வீட்டிற்
போயிட்டு வாங்களேன் என்கி
அவன் மனைவி. சரி என்று எழு
கிளம்புகிறான். அவன் மகன்
வயது பையன் நானும் வர்றேன்
என்று சொல்லிக்கொண்டு
அவர் வீட்டின் முன் ஒரு
நேரம் காத்து நிற்கிறான். ஏனெ
கேட்க ஒரு நாதியுமில்லை. சே
நிச் சாமியாரொருவர் விருந்து
வெளியே போகிறார். இலை
கொண்டுவந்து வெளியே போட
வேலைக்காரி அவனைப் பார்த்து
டுப் போய் ஒரு இலையில் கொ
சோற்றைக் கொண்டுவந்து பே
றாள், அவனுக்கும் அவன் பக்கத்
நிற்கும் பிச்சைக்காரிக்கும். நா
திருக்கேன்னு எசமான்கி
சொல்லுங்கம்மா என்று கெ
றான். எசமான் தூங்குகிறார். இப்
அவரைப் பார்க்கமுடியாது எ
கண்டிப்பாகக் கூறிவிட்டுத் தி
பாராமல் உள்ளே போ
வேலைக்காரி. சரி நாளைக்குப் ப
துக்கொள்வோம் வந்தநேரம் ச
யில்லை என்று தன்னைத்தா
நொந்துகொண்டு, வாடா, த
என்று மகனை அழைத்துக்கொ
குடிசைக்குச் செல்கிறான். இ
சோற்றுக்கு இன்னும்அங்கேமூ
ஆத்மாக்கள் காத்துக் கிடக்கின்
அந்தச் சோற்றைக் கொ
ஐவர் எப்படிச் சாப்பிடமுடி
குழந்தைகள் ஒன்றுக்கொ
போட்டி போட்டுக் கொண்டு
கின்றன. பாவம், அவைகளு
வயிறாரச்சாப்பிட வழி இருக்கி
அதுவுமில்லையே. நீ கொஞ்சம் எ
துக்கோ என்கிறான் மனைவி
பார்த்து. ஒரு உருண்டை எடு
அவள் வாயில போட்டுக்கொ
றாள். மறுபடி குழந்தைகளைப் ப
கிறாள். போதும் எனக்கு. நீ
கொஞ்சம் எடுத்துக்குங்கோ எ
றாள் அவள். வேண்டாம். பின்

(2-ம் பக்கம் பார்க்க)

★ ஜனவரி இருபத்தாறு ★

ஜனவரி 26—இந்தியப் புது அர...யல் ஆரம்பமாகிவிட்டது. சர்க்கார் ...ட்டிடங்களில், பொது இடங்களில், ...அலங்காரமும், அரசாங்க ஆடம்ப...ரமும் அன்று நடைபெற்றுள்ளன—...னால், மக்கள் மன்றத்திலே மகிழ்ச்...சியில்லை! 'குடியரசு' ஆரம்பமாகிவிட்...டது என்ற எண்ணங்கூட இல்லை, ...அதுபற்றிய சிறப்புப் பேச்சுகள் ...இல்லை, 1947 ஆகஸ்டு 15 அன்று ...இருந்த சிறிதளவு உணர்வு கூட ...இல்லை! இந்நாட்டிலுள்ள எல்லா அர...சியல் கட்சிகளும், இந்த அரசியல...மைப்பு மீது, அதிருப்தியைத் தெரி...வித்துள்ளன—ஒரு கட்சியாவது ...இத்திட்டத்தை ஏற்கவில்லை!

...காரணம், புது அரசியலமைப்பு, ஒரு ...முதலாளித்துவச் சிருஷ்டி, பிற்போக்...கின் படைப்பு, வடநாட்டு ஆதிக்கத்...தின் சுரண்டல் இயந்திரம், டெல்...லிக்கு மணிமுடி சூட்டும் திட்டம்!

...மாகாணங்களின் உரிமைகள், வரு...கின்ற இனங்கள், வளம்பெறும் வழி...கள், சுதந்திர நிலை கொள்ளை போய்...விட்டன.

...நமது கையிலே இருந்த மாடப் ...புறா, பருந்தால் விரட்டப்பட்டுவிட்...டது; சுதந்திர உரிமைகள், பறிபோய் ...விட்டன.

...புறா கோபுரக் கோடியில்; கீழே ...நாம்! அண்ணாந்து பார்க்கிறோம், ...அருமைப் புறா பறிபோய்விட்டதே ...என்ற துயரந்தோய்ந்த முகத்துடன். ...வானமளாவி நிற்கும் கோபுரம், ஏற ...முடியாததாகத் தெரிகிறது. ஏக்க...மும் இதய வேதனையும் நமக்கு ஏற்...படுகிறது.

...புதிய அரசியலமைப்பை எண்ணிப் ...பார்க்கையில் ஆகாயமளாவி நிற்கும் ...கோபுரந்தான் நினைவுக்கு வருகிறது. ...புறா கோபுரத்தில் கீழே நாம்! எனி...னும் நமது புறாவை நாம் பெற்றுத் ...தான் ஆகவேண்டும், பெறாமல் முடி...யாது. மாடப்புறாவைப் பெற, கோபு...ரத்தின் மீது ஏறவேண்டும். ஏறவோ, ...நம்மால் இயலாது, ஏனெனில் கால்...கள் இரண்டும் கட்டப்பட்டிருக்கின்...றன—சட்டம் என்ற கயற்றால்! எனி...னும் நாம் ஏறி, நமது புறாவைத் ...திரும்பப் பெறத்தான் வேண்டும்.

'எடுத்தடி வைக்க இயலாதபோது அதற்கான வழி வகைகள் இல்லாத போது, ஏறிச் செல்லும் வாயிலும் சாத்தியிருக்கும்போது எப்படி ஏற முடியும் என்ற சஞ்சலமும் சந்தேகமும் எழும்புகின்றன! உண்மை—எனினும் நாம் நமது இலட்சியத்தைப் பெற்றுத்தான் தீரவேண்டும்—இதில எந்தவித இன்னல் எதிர்நோக்கினும், அவைகளைத் தாங்கி, தாண்டிச் செல்லவேண்டும் கோபுரத்தின் படிக்கட்டுகளில் ஏறி, நடக்கமுடியாவிட்டால் மார்புகளால் ஊர்ந்து சென்று, நமது மாடப்புறாவை—சுதந்திர உரிமையை—நாம் பெறுவோம், என்பதிலே திடமான நம்பிக்கையும் உறுதியும் நமது இதயத்தில் இருக்கிறது.

புது அரசியலமைப்பு நமக்குப் பிடிக்கவில்லை; ஜயப்பிரகாஷ், சரத் சந்திர போஸ் போன்ற முற்போக்கு எண்ணங் கொண்டவர்களும், இதே கருத்தை வெளியிட்டுள்ளனர். 'எங்களது கட்சி, அதிகாரம் பெற்றால் இந்த அரசியலமைப்பை அகற்றுவோம்' என்றும் அவர்கள் முழக்கமிட்டிருக்கின்றனர்.

ஏக கட்சியால், தன்னிஷ்டத்திற்கேற்ப உருவாகியிருக்கும் அரசியல் திட்டம், நமக்கு ஓர் அடிமை சாசனம்; நம் நாட்டு வாழ்வைச் சூறையாடும் சூது வலை! இதிலே எந்தவித எண்ணபேதமும் இல்லை—இதுபோலவே இந்நாட்டு முன்னணிக் கட்சிகள் இந்த அரசியலமைப்பு பற்றி தங்களது கண்டன அலைகளைத் தெரிவித்திருக்கின்றன.

ஆனால் கண்டனமும், அதிருப்தியும் காலங்கடந்ததாகிவிட்டது. அரசியலமைப்பைத் தயார் செய்து முடிப்பதற்குள் மூன்று ஆண்டுகள், முப்பத்தைந்து மாதங்கள், இருந்தன. இந்த இடைக்காலத்தை இந்நாட்டு முற்போக்குக் கட்சிகளான சோஷியலிஸ்டுக் கட்சி, போஸ் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி ஆகிய எல்லாக் கட்சிகளும் வீணாக்கி விட்டன. ஐக்கிய முன்னணியுடன் அரசியலமைப்பு பற்றிய அதிருப்தியை, ஒழுங்கான ரீதியில் எழுப்பவில்லை. இந்த வேதனை நிலைக்கு நாமும் உள்ளாகியிருக்கிறோம்.

நமது கண்டனத்தை, அதிருப்தியை, ஆத்திரத்தைத் தெரிவிக்க, திரட்டிக்காட்ட நாமும் தவறி விட்டோம்!

ரயில் போய்விட்டது! தவறினோம், அதோ வேகமாக நம்மைத் தாண்டிப் போய்க் கொண்டிருக்கிறது!

ஏன், எப்படி எக்காரணத்தால் என்பது அல்லப்பிரச்னை. காரணம், விளக்கப் புகுந்தால் வேதனையும் சோகமுமே வெளிவரும், தக்க பதில் கிடைக்காது, கூறமுடியாது என்பதால்.

நல்ல சந்தர்ப்பங்கள் நழுவிப் போய்விட்டன—இல்லை — நம்மால் நழுவ விடப்பட்டுவிட்டன! உண்மையை மறைப்பதற்கில்லை; ம...றைக்கவும் விரும்பவில்லை!

ரயில போய்விட்டது; இந்திய உபகண்டத்தின் அரசியலமைப்பு தயார் செய்யப்பட்டு நம்மை ஆளத் துவங்கிவிட்டது. இடியும் மின்னலும், நம்மை எதிர்நோக்கிவிட்டன; இன்னலும், துன்பமும் நம்மை நெருங்கிப் பிடித்துக்கொண்டுவிட்டன. காங்கிரஸ் ஆட்சி ... சுயநல சுகபோகச் சட்ட திட்டங்கள் நம்மீது திணிக்கப்பட்டு...டன. நாம் அடிமைப்படுத்தப்பட்டு விட்டோம், நமது கால்களிலே விலங்கு, கைகளிலே கட்டுகள், ...ழுக்கைச் சுதந்திரத்திலே சூறையாடல்—ஆரம்பமாகிவிட்டது!

இந்திய துணைகண்டம்—குடியரசு நாடெனப் பிரகடனப் படுத்தப் பட்டுவிட்டது. ஜனவரி 26— விழா, வேடிக்கை, விருந்து, பேச்சு ஆகிய

தம்முடைய மதக் கொள்கையைப் பரப்புவதற்காக ஒரு கிருஸ்தவப் பாதிரியார் வனாந்தரங்களில் அலைந்து திரிந்து நரமாமிச பட்சணிகளையும் அணுகி உபதேசம் புரிகிறார். ஆனால் நம்முடைய குருமார்களோ தங்கள் சோதரரைத் தொட்டால் தீட்டு என்று எண்ணி ஒதுங்கி வாழ்கின்றனர்.

R. R. ...

தவறிவிட்டோம்; தாண்டிச் சென்றுவிட்டது!

வைகளுடன் இந்திய வரலாற்றில் ஒரு இடம் பெற்றுவிட்டது. அந் நாள், காங்கிரஸ் ஆட்சியாளரின் இன்பநாள்; முதலாளித்துவத்தின் 'முத்திரை' மக்கள் வாழ்வில் பொறிக்கப்பட்ட தினம்; நமது நாட்டுக்கு தீமையும் தீதும் பயக்கக்கூடிய தேதி!

புதிய அரசியலமைப்பு மூலம், புதுச் சட்டதிட்டங்கள், புது ஏற்பாடுகள் இம்மாபெரும் துணைக்கண்டத்தை, ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடுகள் என்று கூறத்தக்க அளவு பரந்துவிரிந்து கிடக்கும் ஒன்பது மாகாணங்களை, முப்பதுகோடி மக்களை ஆளத் துவங்கிவிட்டன.

துணைக்கண்டம்—என்று அழைக்கப்படும் இம்மாபெரும் பூபாகம் ஒரே ஆட்சி நிர்வாகத்துக்கு உள்ளாக்கப்பட்டுவிட்டது, ஒரே நாடு, என்ற போலிப் பூச்சு, பெருமை மூலாம் பூசப்பட்டு.

எண்ணம், வாழ்க்கைமுறை, மொழி, பண்பாடு, பழக்க வழக்கம், கலாச்சாரம் ஆகிய துறைகளில் பல்வேறு வகையினர் வாழும் இப் பரந்த உபகண்டம், குடியரசு, என்று கூறப்பட்டு, தலைவர் என்ற ஒரு நபரின் ஆட்சிக்குரிய நாடு என அறிவிக்கப்பட்டுவிட்டது, அதற்கான சட்டதிட்டங்கள் தரும் அரசியலமைப்பு ஒன்றை ஆக்கிக்கொண்டு. அதன்படி பிரகடனம் செய்யப்பட்டுவிட்டது.

ஹர்ஷன், கனிஷ்கர், அக்பர், அசோகர், சந்திரகுப்தர், அவுரங்கசீப், ஆகிய, மன்னாதி மன்னர்கள் காலத்திலும், எட்டிப் பிடிக்க முடியாததாக இருந்த, நம் நாடு டெல்லி மகுடத்திற்கு என்றும் அடிபணியும் நிலை உண்டாக்கப்பட்டுவிட்டது.

இருநூறு ஆண்டுகள், இந்நாட்டைச் சுரண்டி வாழ்ந்த ஆங்கிலேய ஆதிபத்தியம், வெளியேறிய இரண்டரை ஆண்டுகளில் தன் ஆட்சி ஆதிக்கம், சுரண்டல் வேலை நீடிக்க வழி வகைசெய்துகொண்டுவிட்டது. வடநாட்டு ஆதிபத்தியம் எல்லோரையும் கட்டுப்படுத்தும் அரசியலமைப்பை வகுத்துக்கொண்டு நம்மை ஆளத் துவங்கிவிட்டது.

வேதனை! வேதனை!! வேதனை!!! நம்மை, இடிக்கிறது. கலங்கவைக்கிறது. ஆனால் இத்தனையும் நாம் எதிர்பாராதது அல்ல; எதிர்பார்த்தோம், எனினும் ஏமாந்தோம்!

ஏன் — இதற்குப் பதிலைக் காண முனைந்தால் 'நமது திராவிடர் கழக வாழ்வு' வேளையைத்தான் சோதனையிட வேண்டி நேரும்.

1947—ஆகஸ்டு பதினைந்து ஏற்படு முன், அதாவது இந்தியாவைவிட்டு வெள்ளையர் வெளியேறு முன் நடந்த சம்பவங்கள் பலப்பல. கிரிப்ஸ் தூது — பிரிட்டிஷ் மந்திரி சபைக் குழுவினர் தூது — வேவல் பேச்சு வார்த்தை எல்லாம் நடந்தது. அதன் பின்னரே 'ஆகஸ்டு 15' வந்தது.

வெள்ளையர் இந்நாட்டை விட்டு வெளியேறுவது எப்படி, எம்முறையில், என்பது பற்றிய விவாதங்களுக்குப்பின், ஏற்பட்ட முடிவின் விளைவாகவே "சுதந்திர" இந்தியத் துணை கண்டத்துக்குக் கிடைத்தது. இந்தியத் துணைக்கண்டத்தை விட்டு, வெளியேற, சுதந்திர முன்னணியிலிருந்த காங்கிரஸ் — லீக் கட்சியினருடன், பேசி ஒரு ஏற்பாடு செய்துகொண்டனர். அந்த ஒப்பந்தத்தின் விளைவாகவே, சுதந்திரமும், அதன் காரணமாக அரசியல் நிர்ணய சபையும் ஏற்பட்டது. அந்த அரசியல் நிர்ணயசபை இந்தியாவின் அரசியலைத் தயார் செய்து தந்துள்ளது.

இந்த ஏற்பாடு நடைபெற்ற காலத்தில், பிரிட்டிஷ்—காங்கிரஸ் பேச்சு வார்த்தைகள் நடந்த வேளையின் போது, நாம் தவறிவிட்டோ[ம்] தக்கது செய்யவில்லை. வந்த தூ[து] குழுவினரைச் சந்திக்கவில்லை, ந[ம்] இதய ஒலி அவர்களை அடை[ய] செய்வதற்கான ஏற்பாடுகளைச் செ[ய்]யவில்லை!

முடிவாக, அதிகார மாற்[றம்] ஏற்பட்டது. சுதந்தரப்போ[ர்] முன்னணியிலிருந்த காங்கிர[ஸ்] ஆட்சிப்பீடம் ஏற்றது. அ[தை]யொட்டி, அரசியலைத்தயாரிக்கவே[ண்]டிய பொறுப்பையும் மேற்கொண்[டு] தனக்குப் பிடித்த நிபுணர்க[ள்] தன் சொல்லுக்குத் தலையாட்[டும்] நபர்களை நியமித்துக்கொண்டு, [...] அரசியலைத் தயாரித்துவிட்டது.

நாட்டுச் சுதந்தர வாழ்வுக்[குப்] போராடிய காங்கிரஸ் கட்சி[யின்] முன்னணித் தலைவர்களாக இ[ருந்த]தும், இருப்பதும், வடநாட்[டின]ராகவே இருப்பதால், எல்லா [வகை]யிலும், அதிகாரமும் ஆட்[சிப்] பொறுப்பும் தங்கள் கையிலே [இ]ருக்கவேண்டும் என்ற எண்[ணத்]துடன் 'டெல்லி ஆதிபத்தியத்[தை]' சிருஷ்டித்துக்கொண்டு விட்[டு] இந்தியா குடியரசு நாடு எ[ன] பிரகடனம் செய்துவிட்டனர். [அதி]காரங்களையும், பொறுப்பையும் [தங்]கள் வசம் குவித்துக்கொண்டு[விட்]டனர்.

இந்த ஏற்பாடுகள் நட[ந்த] போதும், அதிகாரங்கள் குவி[க்கப்] படுவதற்கான ஆயத்தங்கள் [நடை]பெற்ற வேளையிலும் நமது [...]யும் எண்ணமும் எதிரொலி[க்கும்]படி நாம் செய்யவில்லை. மக்கள் [மன்]றத்தில், நமது திராவிட ஒலி[...] உண்மை, ஆனால், நமது ஆ[...] படைக்கும் சக்தி உருவாக்க[ப்பட்]டிருப்பதை உணர்த்தி [...]யொழிய, அதைத் தடுக்க [...] செய்யவில்லை. மூன்று [...]கள் இப்புது அரசியலமைப்[பு ...] படுவதற்குள் இடைவேளை [...]தது. இந்த இடைக்காலத்தி[ல்] தவறிவிட்டோம்; புது அரசி[யல்] நம்மை விழுங்கும் முதலை[...] வாகிவிட்டது! வலிவும், சக்[தியும்] மக்கள் பலமும் வாய்ந்த மகத்[தான] நமது இயக்கம், மக்கள் மன்[றத்தில்] 'வலம்' வந்துகொண்டிருக்[...]

> ஜாதிமுறை ஆட்டங்கண்டுவிட்டது. அது இறப்பது உறுதி. முன்னேற்றக் கருத்துக்கள் அலை அலையாக வந்து துரிதமாகப் பரவுகின்றன. ஆணும் பெண்ணும் சமம் என்ற கருத்து இன்று மேலோங்கி நிற்கிறது, இந்தக் கருத்துகளுக்கு ஏற்ப, விவாக முறையை மாற்றிக்கொள்ளாமல் தீராது.
>
> R. R. திவாகர்.

வேதனை வீணையை மீட்ட விரும்பவில்லை

ழிய, திருப்பித் திருப்பி பேசிக்
ண்டிருந்ததே தவிர, நமது
ர்ப்பை, அதிருப்தியை, ஆத்தி
தைக் காட்டவில்லை—காட்டிச்
ள்ளும் வழி வகைகளைக் காண
வில்லை! தவறிவிட்டோம்!!

மது ஆட்சேபணை, எதிர்ப்பு,
ருப்தி ஆகியவைகள் காட்டப்
வேண்டிய காலம், வீணுக்கப்
டுவிட்டது. மக்கள் மன்றத்தில
சரி பவனி வந்த பெருமையும்,
டம் உண்டு. இருந்தும், நாம்
றிவிட்டோம், நல்ல சந்தர்ப்பங்
கவனியாமல் இழந்துவிட்
ம்!

ந்தத் தவறு—திராவிட முன்
ற்றக் கழகமாக இப்போது உரு
வளர்ந்து நிற்கும்—நமக்கு
று நன்றாகத் தெரிகிறது.

மூன்று ஆண்டுகளிருந்தன —
தவறாது நாமும் எல்லா அரசி
கட்சிகளையும் விட வேகமான
வில் பிரசாரம் செய்தோம்;
ாத இடமில்லை, செல்லாத
ல்லை, எனினும் நமது ஆட்சேபக்
ல், அரசியலமைப்பு சபையை
ும் அளவுக்கு சட்டதிட்டமான
வில் எதுவும் செய்யவில்லை.
ியது உண்டு கிண்டலும்
யும் செய்து, ஆனால் அது
மான நம்முடைய தொண்டு
லவே ஆகிவிட்டது! ஆபத்து
போகிறது என்று உணர்ந்த
டு; ஒருசில இடங்களில்
ச் சனியன் பற்றிப்பேசிவிட்டு,
திட்டம்' குறித்தும் சொற்

ட்டங்களுக்குப் பணிந்து
ப்பது வரிகளை ஒழுங்காகச்
த்துவது, அரசாங்கத்திற்
துரோகம் செய்யாதிருத்தல்
யவை மாத்திரம் தனி நபரின்
மைகள் என்று கருதக்கூடாது.
சரியோ அதைத் தெரி
பதோடு அமல் நடத்தவும்
ண்டும். எது தீயதோ அதைக்
டு பிடிப்பதோடு முறியடிக்க
வேண்டும். அதுதான் பொது
க் கடமை.

எட்மண்டுபர்க்

பொழிவாற்றியதுண்டு: ஆனால் அதற்கான பலன் கிடைக்கவில்லை, கிடைக்கும்படியான வகையில் நமது போக்கை நாம் மாற்றிக்கொள்ளாமலிருந்துவிட்டோம்!

வெள்ளம் நம்மை இழுத்துக் கொண்டுபோக ஆரம்பித்துவிட்டது, உடைப்பு எடுக்குமுன் நாம் அடைக்காததால், எடுத்தபின்னரும் எச்சரிக்கை செய்து தடுக்காததால்!

இது ஏன்? — இக்கேள்விக்கு கிடைக்கக் கூடிய பதிலை நாம் விளக்க விரும்பவில்லை; வேதனை வீணையை மீட்டுவதால் அபஸ்வரம் தான்மீண்டும் எழும்புமேயொழிய ஆபத்தைப் போக்கும் வழியோ, வகையோ, தென்படாது என்பதால்!

தவறிவிட்டோம்; போலிப் பெருமையால் நாம் இதை மறைக்கவிரும்பவில்லை. நெஞ்சைக் கலக்கும் இத் தவறை நாம் இன்று உணர்கிறோம், எனவே உரைக்கிறோம் இனியாவது இந்நிலை ஏற்படக்கூடாது, ஏற்பட இடம் தரக்கூடாது என்பதால்!

ரயில் போய்விட்டது; சென்ற திக்கை நினைந்து ஏங்கி பயனில்லை. இனி அடுத்தசந்தர்ப்பம்வரும்வரை, காத்திருக்கத்தான் வேண்டும்.

அரசியலமைப்பு நம் மீது திணிக்கப்பட்ட நாளான ஜனவரி 26 ஐ நாம் நமது அதிருப்திக்குரிய நாள் என அறிவித்திருக்கிறோம். அன்று நடைபெற்ற கொண்டாட்டங்களிலே, நமக்கு மகிழ்ச்சியில்லை, மனவேதனைதான் இருந்தது.

நம்மை அடிமைப்படுத்தும் இந்த அரசியலமைப்பை நாம் கண்டிக்கிறோம், இந்த அரசியலமைப்பு மாற்றப்பட்டாலதான் நம் மனக்குறை தீரும்—அவசியம் மாற்றப்பட்டுத்தான் ஆகவேண்டும், அதற்கான முயற்சிகளில நாம் ஈடுபடத் தயக்கமோ, தவக்கமோகொள்வதற்கில்லை.

அதே வேளையில், நமது எண்ணத்தைச் சாதிக்க, நமது இலட்சியத்தை அடைய, சட்டவிரோதம் என்கிற பாதையிலே நடக்க நாம் விரும்பவில்லை. பலாத்காரம், சதி, சூதுமதி இவை நமக்கு பிடிக்காத செயல்கள். குழப்பத்தையும், கலவரத்தையும் ஏற்படுத்தி நாட்டின் நல்வாழ்வைச் சீர்குலைத்து, இலட்சியத்தை அடையமுனைவதால், நாட்டு வாழ்வு சீர்குலையுமே தவிர, நமது எண்ணம் விரைவில் வெற்றிபெற வழியேற்படாது.

எனவே, நமது இலட்சியத்தைக் காண, சுதந்திரத்தைப் பெற நாம் நடத்தும் போராட்டம் —அறப்போர்—நேர்மையையும், சட்ட வரம்பைத் தாண்டாமல், நேர்மையுடன் இருக்கும். நமது கோரிக்கைகளைக் கூறும்போது ஆளவந்தாரின் அடக்குமுறை அதிகமாகலாம்; பயம் இல்லை நமக்கு அதை ஏற்கச்சித்தமாக இருக்கிறோம்! சீற்றமும், சித்திரவதையும் அதிகரிக்கலாம்; அதனால் அலறி ஆபத்துக் குழியில் விழுந்துவிடமாட்டோம்!

நேர்மை என்கிற பாதை, கடமை என்கிற விளக்கு, அமைதி என்கிற ஊன்றுக்கோல்கொண்டு இருட்டு மயமாக்கப்பட்டிருக்கும் நமது இலட்சியப் புரியைநோக்கி, நாம், எப்போதும் போலஇன்னும் வேகமாக முன்னேறியே செல்வோம். யார் தடுத்தாலும், எவர் முட்டுக்கட்டையிட்டாலும், நமது பயணத்தைத் தடுத்துவிடமுடியாது.

முன்பு—பல ஆண்டுகளுக்குமுன்னர்—வங்கத்தைத் துண்டாக்கிற்று இரண்டாக, பிரிட்டிஷ் ஆதிபத்தியம் அதுகண்டு, வங்கத்தார், குமுறினர் எதிர்ப்பியக்கம் நடத்தினர் 'அடாது, இது' என்றனர் "ஆகா! ஒற்றுமையைச்சீர்குலைப்பதா" என்று ஓங்காரக்கூச்சல் எழுப்பினர் — வெள்ளை ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சி என்று கூறினர்! ஆர்ப்பரிப்பு, கொதிப்பு, ஆத்திரக்கூச்சல்கண்ட ஆங்கில ஆட்சிஅப்போது, மார்தட்டித்தான் பேசிற்று. சட்டம் செய்துவிட்டோம், அதை மீண்டும் ரத்து செய்வதென்பது எங்கள் அகராதியில் இல்லை, இட்டது இட்டதுதான் என்று கர்வத்துடன்பதிலதந்தனர்!

ஆனால் கர்வம் நீடிக்கவில்லை—மக்கள் எதிர்ப்பு மண்டியிடச்செய்தது. சட்டத்தை மீண்டும் மாற்றும்படிச் செய்தது துண்டுபோடப்பட்ட வங்கம் ஒரேவங்கமாக ஆக்கப்பட்டு

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு 29—1—50 காஞ்சி

சிந்தனைக்கு !

✻

"விரோதமில்லை எங்களுக்கு! வெறுப்பையும் துவேஷத்தையும் கொண்டே வாழ்நாட்களை வீணாக்கும் விசித்திரப் பிறவிகளுமல்ல நாங்கள்" என்று வெளியிட்டார், தலைநகரிலே நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில், தலைமை தாங்கிய மேசலம் தோழர் ஏ. சித்தையன்.

'ஆம், அதுதான்' என்று ஆமோதிப்பது போல, மாவட்ட மாநாட்டிலே குழுமியிருந்த மக்கள் 'கடல்' அவரது கருத்தை எதிரொலிப்பது போல கைகளைத் தட்டினர்!

நாம் இந்நாட்டின் விடுதலைத் தூதுவர்கள்—வேதனையும் சோதனையும் நிறைந்து கிடக்கும் வாழ்ந்து வீழ்ந்த சமுதாயத்தின் காவலர்கள். நமது இலட்சியம், சாதிபேத நாற்றம் ஒழியவேண்டும், சமரசமும், சமவாழ்வும் மலரவேண்டும், சுதந்திரப் புருக்களாய், நமது மக்கள் தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்பதாகும். ஏழ்மையும் பழைமையும் பின்னிக் கிடக்கும், ஒருவகை கெட்ட சமுதாயத்தின் வளைந்த நிலையை நிமிர்க்கப் பணிபுரியும் நமக்கு, சூது மதியினரும், சுயநலச் சித்தமுடையோரும் சூட்டியபட்டம்,

பிராமணத் துவேஷி

வகுப்புவாதி

போன்றவைகள். வாழ்வு தேவை, என்று கேட்பதற்காக இந்தப் பட்டங்களைச் சனாதனமும், வைதீகமும் நம்மீது வீசியிருக்கின்றன. சுய நலமும் சுரண்டலும் பறி போகிறதே என்ற பதட்டத்துடன் நம்மீது பழைமைப் புரியினர் வீசும் இந்த ஈட்டிகளுக்கு நாம் அஞ்சவில்லை!—இது சகஜம், என்பதால்.

ஆனால், நாட்டு வாழ்வில் அக்கரையும், மறுமலர்ச்சி மலரவேண்டும் என்பதில் மட்டற்ற வேட்கையும் கொண்டு நிற்கும் இளம் இதயங்களின், உள்ளத்திலும் இந்த விஷவித்து ஊன்றப்படுவதையும், அது வளர்வதையும் காண நம் உள்ளம் துடிக்கிறது.

பிற்போக்கு வாதிகளின், உறைவிடமே பிராமண சமுதாயம் என்று கூறிவிட முடியாது. சாதிபேதம் ஒழியவேண்டும், சமரச வாழ்வு உதயமாகவேண்டும் என்பதில் ஆவலும் அக்கரையும் கொண்ட பல தொண்டர்கள், எழுத்துச் சிற்பிகள் இருக்கிறார்கள் அங்கு. எனினும், சந்தேகம் என்ற திரை, அவர்களுடைய இதயங்களை மூடிக் கிடக்கிறது. சபலம் அவர்களை ஆட்கொண்டிருக்கிறது. அவர்களை நோக்கித்தான் தோழர் சித்தையன் அறைகூவல் விடுத்தது.

வாழப் பிறந்த மனிதன், வேற்றுமையையும் வித்தியாசத்தையும் பேசிக்கொண்டே காலத்தை நகர்த்துவதால் என்ன லாபம் இருக்க முடியும்? அவனது எண்ணங்கள்தான் எந்த வெற்றியைச் சாதிக்க முடியும்? அதிலும் சாதிபேதமற்ற சமுதாயத்தை நிறுவப் பாடுபடும். நாம், சாதிகளை வளர்க்கவா விரும்புவோம்? நாம், காமாலைக் கண்ணர்களல்ல கருத்துக் குருடர்களுமல்ல. எனவே, நாம், எவருக்கும் விரோதிகளல்ல, தனிப்பட்ட எந்த வகுப்பையும் தூற்றி வாழ நினைக்கும் வகை கெட்டவர்களுமல்ல!

மூடநம்பிக்கை—பழைமை இரண்டும் நமது எதிரிகள். இவைகளை வளர்க்கும் வழிகள் நமது விரோதிகள். இந்த உண்மையை முற்போக்குக் கருத்துக் கொண்டவர்கள்—எங்கிருந்தாலும் சரி—அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம், உண்மையை அவர்கள் உணரவேண்டும் என்ற விருப்பத்தால்!

வேற்றுமையெண்ணமும் விரோதச் சுபாவமும், விபரீதமான விளைவுகளை உண்டாக்குமேயொழிய, வளரும் உலகில், மக்கள் வாழ்வை வளமாக்க உதவி விடாது.

இதைச் சிந்திக்க வேண்டுகிறோம், நம்மைப் பற்றிய சூதுரைகளில மயங்கி, உண்மையென நம்பிடும் நண்பர்களை. பரந்த மனித சமுதா யம், துன்பமும் துயருமற்று வா வேண்டும் என்பதுதான் நமது கொள்கை. ஒருவன் மாடியிலும் இன்னொருவன் தெருக்கோடியிலும் இருப்பது கூடாது—சாதியும் பே மும் சமுதாயத்தை சாம்பலாக்க கூடாது என்பதுதான் நமது இல ட்சியம்—அதற்கான வகையில் பணி புரிவதுதான் நமது நோக்கம்.

இந்த உண்மை பன்முறை ந மால் எடுத்துக் கூறப்பட்டது என் றாலும், இப்போது வலியுறுத் விரும்புகிறோம். வம்பும், வீண் ச ரவும் விலகி, மக்கள் வாழ் மலர்த் தோட்டமாக, எல்லோரு கைகோர்த்து உழைத்து முன்னே வேண்டும் என்ற ஆர்வத்தால்!

விரோத மனப்பான்மையும் த பபிப்பிராயங்களும் நீடிப்பது, நல் தாகாது, நன்மை விளைக்காது என் நல்லெண்ணத்தால்!

✻

நமது நன்றி

திராவிட நாடு பொங்கல் மலர் மேலட்டை வண்ணப்படம் குறித் பல தோழர்கள் பாராட்டி, புகழ்ந் நமக்கு எழுதியுள்ளார்கள் உழைத்து வாழும் உழவ அவனது பெருமிதத்தோற் அவனைக் கண்டு அகமும் முகமு மகிழ்ச்சியால் மலர, அமைதி த முகத்துடன் புதுப்பொங்கல் எ பூரித்து நிற்கும் வாழ்க்கை துணை ஆகியோரை சித்தரித்துத் த பெருமை சென்னை ஓவிய வல்லு பாலு பிரதர்ஸ் அவர்களைச் சார் தாகும். வாசகர்களின் மகிழ்ச்சி யும் நம்முடைய பாராட்டை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறோம்.

✻

வணக்கம்

பொங்கல் விழாவையொட் வாழ்த்துக்கள் அனுப்பி மகிழ்வி அனைவருக்கும் எனது நன்றி கல வணக்கங்கள்!

"திராவிடநாடு"
காஞ்சி. } அரங்கண்ண

✻

சட்டம் சாசுவதமானதல்ல

7-ம் பக்கத் தொடர்ச்சி

"ஆகஸ்டு 15"வரை, ஒரே மாகாணமாக இருந்து, பின் பாகிஸ்தானுக்குப்பாதியும், இந்துஸ்தானுக்கு மீதியும் என்று ஆயிற்று!

சட்டம், சாசுவதமானதல்ல. அதிகாரபீடத்திலிருப்போரால், மமதை, மண்டைக் கர்வம் காரணமாகப் பேசப்படலாம் 'போட்டால் போட்டதுதான்' என்று! ஆனால் அந்தப் பேச்சை மக்களின் இதயக் குமுறல் மாற்றிவிடும், மக்கள் சக்திமுன் மமதையும் கர்வமும் பொடிப்பொடியாகிவிடும்.

இதை வங்காளத்தின், பழைய செய்தி நமக்குத் தெரிவிப்பதாகும். முதலில் அந்நிய ஆட்சி துண்டாடும்படிச் சட்டம் போட்டது. பின் ஒன்றாகும்படி, அதை மாற்றிச் சட்டம் செய்தது. அதற்குப் பின் பல ஆண்டுகள் கழித்து, மீண்டும் துண்டாடச் செய்து இரண்டு நாடுகளாக்கி இன்னொரு சட்டம் இயற்ற வேண்டி நேரிட்டது.

எனவே, இன்றைய அரசியல் சட்டம், இன்று நம்மீது திணிக்கப்பட்டிருந்தாலும், சட்டம் செய்தாகிவிட்டது என்ற சந்தோஷத்தை, ஆதிபத்தியக்காரர்களின் இதயத்தில் எழுப்பியிருந்தாலும்—என்றாவது ஒருநாள் மாற்றப்பட்டுத்தான் தீரும், மாற்ற நேரிடும் என்பதில் ஐயமில்லை.

அஸ்ஸாமிலே ஆத்திரம், வங்கத்திலே வம்பு, பஞ்சாபிலே கிளர்ச்சி, சென்னையிலே குமுறல்—இத்தனை 'வரவேற்பு'களுடன் இப் புது அரசியல் உதயமாகி யிருக்கிறது.

புது அரசியல் மூலம், மாகாணங்களுடைய அதிகாரங்கள் "டெல்லி"யில் கொண்டு போய்க் குவிக்கப்பட்டிருப்பது—ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ளவர்களை ஆத்திர மயமாக ஆக்கியிருக்கிறது. மாகாணத்துக்கு கிடைக்கக்கூடிய வருமான இனங்கள், மத்திய சர்க்காருக்குக் கொண்டுபோகப் பட்டிருக்கின்றன. குடியரசின் தலைவராக வருபவர், நினைத்தபோது, மாகாணங்களின் நிர்வாக அதிகாரத்தில் தலையிடும் அளவுக்கு மாகாணத்தின் சுதந்திரம் பறிபோயிருக்கிறது. மாகாணங்கள்—மத்திய சர்க்கார் இரண்டு இடத்திலும், ஆட்சி மேடையில் அமர்ந்திருப்பவர்கள் ஒரே கட்சியினர்—காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்றாலும், இரண்டு இடத்துக்குமிடையே சச்சரவும், குமுறலும் ஏற்பட்டுவிட்டன; வளர்ந்து கொண்டிருக்கின்றன.

கோபால ரெட்டிமுதல் கோபிசந்த் பார்கவாவரையில் குமுறும் எரிமலையாகத்தானிருக்கின்றனர். இந்த நிலை ஏற்படாமல் தடுக்கமுடியாது, காரணம் அதிகாரத்தை அனுபவித்தவர்களிடமிருந்து பறித்து எடுத்தால், அவர்கட்கு ஆத்திரம் வரத்தான் செய்யும். அந்தக்காட்சி, இரண்டரை ஆண்டு சுதந்திரத்தில், வெகுவேகமாக, அடிக்கடி நடைபெற்று வந்திருக்கிறது. புது அரசியலமைப்பு மூலம் மாகாணம் — மத்தியசர்க்கார் இரண்டு இடத்துக்குமுள்ள பிளவும் பேதமும், குமுறலும் கொந்தளிப்பும், வளரச் செய்ய வழியிருக்கிறதே யொழிய, மங்கிவிடப் போவதில்லை!

அடிமைப்பட்டுக் கிடந்த இப் பரந்த துணைக்கண்டத்தை, அந்நிய ஆதிபத்தியத்திடமிருந்து மீட்கும் வேலையில் காங்கிரஸ் பாடுபட்டது. அதன் விளைவாக சுதந்திர தாகத்தை எழுப்பியதன் காரணமாக நாடெங்கும், வெள்ளையன் ஆட்சி ஒழிய வேண்டும் என்ற எண்ணங்கொண்டிருந்த மக்கள் மன்றத்தில், காங்கிரசின் செல்வாக்கு வளர்ந்தது. காங்கிரசை நடத்திச் செல்லும் முன்னணியிலிருந்த தலைவர்கள் மாட்டும், மக்களுக்கு, மகத்தான பாசமும், 'இவர் எம்மை உய்விக்கவந்த உத்தமர்' என்ற எண்ணத்தால் விளைந்த பக்தியும் ஏற்படலாயிற்று.

> "கெட்டவர்கள் தங்களுக்குள் ஒன்றுபடும்போது நல்லவர்களும் தங்களுக்குள் ஒன்றுபடுவது அவசியம் இல்லையேல்நல்லவர்கள் ஒருவர் பின் ஒருவராக வீழ்ச்சி அடைவர்"
>
> எட்மண்டு பர்க்

அன்று, சுதந்திரப் போரின் போது ஏற்பட்ட "பக்தி" இன்னும் மாறவில்லை. எனவே, காங்கிரஸ் கட்சியின் முதல் வரிசையிலிருக்கும் (First Rank Leaders) தலைவர்கள், எது சொன்னாலும் சரி, என்ற எண்ணமும், அவர்கள்மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக 'நல்லது தான் செய்வர்' என்ற கருத்தும், மக்கள் மனதிலே இன்றும் மாறவில்லை.

காங்கிரஸ் ஆட்சிபீடத்தின் முதல் வரிசையிலிருக்கும் நேரு பட்டேல் போன்றாருடைய செல்வாக்கும், 'சுட்டுவிரல் காட்டினால் போதும் சொன்னதெல்லாம் செய்வேன்' என்று மக்களிடையில் அவர்கள் மீது எழும்பியுள்ளபக்தியுள்ளமும் இன்னமும் இருக்கிறது. இந்த நிலை பொதுமக்களிடம் மட்டும் என்றல்ல! பொது மக்களிடை உலவி வரும் தலைவர்கள்—காங்கிரஸ்காரர்கள்—எல்லோர் இதயத்திலும், நேரு பட்டேல் போன்றாரிடம் மதிப்பும் மரியாதையும் அளவுக்கு மீறிய வகையிலிருக்கின்றன. அவர்கள் எது சொன்னாலும், அதைச்செய்வதுதான் கடமை, நிறைவேற்றி வைப்பதுதான் தேசியத் தொண்டு என்ற எண்ணம் நிலவுகிறது. அதன் காரணமாக தப்போ, தவறோ, குற்றமோ, குறையோ எது நேர்ந்தாலும், மத்திய சர்க்காரிலும் சரி, மாகாண மந்திரிமார்களிடத்திலும் சரி, அப்போதைக்கப்போது மறைக்கப்பட்டுப் போய்விடுகிறது. இந்த நிலை என்றும் நீடித்து நிலைக்காது; நீர்க்குமிழி போல, என்றாவது ஒரு முடிவுக்குவரத்தான் செய்யும்.

மற்றும் இந்தியா ஒரேநாடு, யாவரும் இந்தியர் என்று வெள்ளையராட்சியை விரட்ட காங்கிரஸ் கட்சியினர் எழுப்பிய முழக்கம், இந்நாட்டில் வாழும் பல இன கலாச்சார மக்களுடைய மனதில் நிறைந்து கிடக்கிறது. இந்த, ஐக்கிய எண்ணமும், எப்போதும் நீடிக்க முடியாதது. நாம்யார்—என்பது, கட்சிப் பற்று, பல்லாண்டுப் பழக்கம் காரணமாக மறைக்கப்பட்டாலும், ஒரு நாள், ஒளி வீசத்தான் செய்யும். அதற்கான அறிகுறிகளும் இப்போதே தெரிகின்றன!

தனிநாட்டுணர்ச்சி வளர்ந்தே தீரும்!

நேரு, பட்டேல் போன்ற முதல் வரிசைத் தலைவர்களுக்கு அடுத்த படியாக, அவர்கள் இடத்தைத் "நிரப்ப" காங்கிரஸ் கட்சியில யாரும் இல்லை. யார், அந்த இடத்துக்கு வந்தாலும், இப்போதிருக்கும் அவ்வளவு செல்வாக்கும் மதிப்பும் ஏற்பட முடியாது.

எனவே எதிர்காலத்தில், அந்த இடத்தில் அமருபவர்கள் தங்கள் ஆட்சிப்பொறுப்பையேற்று அதிகாரம் நடத்தத் துவங்கும்போது, மறைந்து கிடக்கும் மனக்குறைகள், மகத்தானதாகத் தெரிய ஆரம்பிக்கும். பிரகாசம் பேச ஆரம்பிப்பார்- நேற்றுவரை அவர்கூட இருந்து அவராளவுமதிப்பு பெற்றிருந்த ஒருவர் குடியரசுத் தலைவராக ஆனால், காரசாரமாக! காமராஜருக்கும் அந்த அளவு துணிவும், வேகமும் பிறக்கலாம்—இது, இன்றைய அரசியலமைப்பில் "டெல்லி"யில் கொண்டுபோய் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களையும், எதிர்காலத்தையும், ஒப்பிட்டுப்பார்க்கும்போது நன்கு விளங்கும்.

இப்போதே மாகாணங்களில்—காங்கிரஸ் ஆட்சியினரிடையிலேயே—மத்திய சர்க்கார்மீது எழும்பியிருக்கும் ஆத்திரமும், அதிருப்தியும் எதிர்காலத்தில் வளரத்தான் செய்யும். இந்த நிலை ஏற்பட்டால் குமுறலும் கொந்தளிப்பும் ஏற்பட்டு கூடாரத்துக்குள்ளேயே குடுமிப் பிடிச் சண்டை ஆரம்பமாகியே தீரும்.

ஆபத்து நம்மை அணைத்துக் கொண்ட இந்த நேரத்தில், துயர் போக்கவழி கிடைக்குமா, திணிக்கப்பட்ட அரசியலை நீக்க வழிகிடைக்குமா, மாடப்புறா கிட்டுமா என்று எண்ணிப் பார்க்கும்போது, நமது இலட்சியத்துக்கு, விடுதலை வேட்கைக்கு எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் உதவி கிடைக்கும், என்ற நம்பிக்கை ஒளிவிடுகிறது.

புது அரசியல் அமைப்பு மூலம், மாகாண அதிகாரங்கள் பறிபோய் விட்டன. கூட்டாட்சிக் குப்பதில் ஒரே நபராட்சி உதயமாகிறது, என்று இந்த நாட்டிலுள்ள முற்போக்குக் கட்சிகள் எல்லாம் கண்டித்திருக்கின்றன; பாசிசமும், முதலாளித்துவமும் சோரவாய் திறந்துகொள்ள வழியமைக்கப்பட்டுவிட்டது என்று கண்டனங்களைச் சொரிந்துள்ளன.

மக்கள் மன்றத்திலே மகிழ்ச்சியில்லை, வளர்ந்துவரும் முற்போக்குக் கட்சிகளும் ஏற்கவில்லை, எங்கும் அதிருப்தி மயம்—இந்நிலையில் இந்திய புது அரசியல் ஆரம்பமாகியிருக்கிறது.

எனவே, எதிர்காலம், நமது இலட்சிய வெற்றிக்கு, ஏதுவாக இருக்கும் என்ற நம்பிக்கை நமக்கு ஒளிவிடுகிறது. இந்த அரசியலமைப்புக்குப் பதில், இன்னொன்று ஏற்பட்டுத்தான் தீரும் என்ற நிலை, நம் கண்ணுக்குக் காட்சியளிக்கிறது.

நமது இலட்சியப் பாதையை மூடும் வகையில் இந்த அரசியலமைப்பில் இடங்களிருக்கலாம். நமது உரிமை முழக்கத்துக்கு மூடியிடும் தந்திர சட்ட திட்டங்களும், இருக்கலாம். நம் கடமைப் பாதையைத் தடுக்கும் வழி வகைகள் இருக்கலாம். எனினும் நாம் கோழைகளல்ல; வீரர் பரம்பரை!

'நட்பு இல்லாவிட்டால் பகைமை' என்பதுதான் நமது இரத்தத்தில இருப்பது. நியாயம், நேர்மையுடன் நமது இலட்சிய புரியை நோக்கி நடப்போம் நாட்டில், முற்போக்கு விரும்பும் அரசியல் கட்சிகளுடன், முடிந்தால் ஐக்கிய முன்னணி அமைத்துக்கொண்டு, பிற்போக்குச் சிம்மாசனத்தை ஆட்டி நகர்த்தி [illegible]போம்!

'தவறி விட்டோம்' என்ற மனக்குறையை, 'தவறமாட்டோம்' என்ற கவனப் பொறுப்பாக மாற்றி, நம் மக்கள் சமுதாயம் விடுதலை பெறும் வழியைக் காண்போம்.

கலக்கமும் கவலையும் நமக்கில்லை; கடமையும் தொண்டும் நம்மைத் தழுவிக்கிடக்கின்றன! 'வேதனையும், விம்மலும் விலகட்டும்; வீரர்கள் படை தயாராகட்டும், வெற்றி நமதே; கொட்டு முரசு' என்று நாம் கொக்கரிக்கும் நாள் ஒன்று ஏற்பட்டுத்தான் தீரும்!

புது அரசியலமைப்பு நம்மை அடைத்துப் போட்ட புலிக்கூண்டு, அதினின்றும் வெளியேற, தந்திரமும் சாமர்த்தியமும் மட்டும் போதாது, நேர்மையும் நெஞ்சுறுதியும் வேண்டும்! ஒற்றுமையும், கூட்டு முன்னணியும் உருவாக வேண்டும்!

ஆகஸ்டு 26 — இதற்கான சூழ்நிலையை நமக்கு விளக்கியுள்ளது. அதிருப்தியும் மனக்குறைவும் நமக்கு மட்டும் என்றல்ல எல்லோரிடையும் நிலவுகிறது என்பதை எடுத்துக் காட்டிவிட்டது.

எனவே, புலிநிகர் வீரர் நாம், என்ற முழக்கத்தை மனதில் வைத்து, மலை வீழினும் மனங்கலங்கோம் என்ற வெற்றி முரசுடன் விரைந்து நடப்போம்! கோபுரத்தின் மீது ஏறுவோம்—மார்பால் ஊர்ந்து செல்லுவோம்—கஷ்ட நஷ்டங்களையேற்போம்—கடமைப்படிகளை ஏறிச் செல்வோம்! வெற்றி நமதே!

---*---

தனிநபர்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்ற பல வழிகள் உண்டு. முதலாவதாக தமது தொகுதியைச் சேர்ந்த சட்ட சபைப் பிரதிநிதியிடம் ஒவ்வொரு பிரஜையும் இடையறாத் தொடர்பு கொண்டிருக்கவேண்டும். தேர்தல் முடிந்தபிறகு சட்ட சபை மெம்பர் தங்களைக் கவனியாமல் இருக்கப்பிரஜைகள் அனுமதிக்கக் கூடாது. சட்ட சபையில் அந்த மெம்பர் செய்தவேலை, செய்யத் தவறிய வேலை ஆகியவற்றுக்குக் காரணம் காட்டுமாறு அவருக்குப் பிரஜைகள் கடிதம் எழுதிக்கொண்டிருக்க வேண்டும். தங்கள் ஊர் சம்பந்தமாக சர்க்கார் செய்த காரியங்கள், செய்யத் தவறிய காரியங்கள், தங்கள் ஊரின் தேவைகள், குறைகள் ஆகியவை பற்றிச் சட்டசபையில் கேட்கவேண்டிய கேள்விகளுக்கு நகல் எழுதி தங்கள் பிரதிநிதிக்கு பிரஜைகள் அனுப்பவேண்டும்.

பேராசிரியர்
M. ரத்னசாமி.

* பொது மொழி *

[M. S. ராமசாமி]

26—1—50 முதல், பிரிட்டிஷாரின் 'அரசியல் முறை' நீக்கப்பட்டு, புதிதாக ஏற்படுத்திய அரசியல் முறை அமுலுக்கு வருகிறது. வட இந்தியா அன்று மாபெரும் ஆரவாரத்தில் மூழ்கித் திளைக்கும். "வட இந்தியாவே நமது வாழ்க்கையின் கருவூலம்" என்று, மதிமயங்கித் திரியும் திராவிடத் தோழர்களும் அன்று ஆர்ப்பாட்டம் செய்வர். "உண்மையில் அந்த நாள் எத்தகைய நாள்?" என்று விசாரித்து உணர்பவர்கள் எங்காவது மூலையில் முடங்கிக் கிடப்பர். எனவே, நூற்றுக்கு நூறுபேரும் அந்நாளை ஏற்றுக்கொண்டாடினார்கள் என்று காங்கிரஸ் ஏடுகளில் வரும் செய்திகள், உண்மை என்றே உலகத்தார் நினைப்பர். வேறு என்ன நினைக்க முடியும்? அப்படியானால் அந்த நாள் கொண்டாடத் தகுந்த நாள் இல்லையா? என்று கேட்கலாம். ஆம்; அந்த நாள் தென்னாட்டாருக்குத் தீங்குதரும் நாள் என்பதில் ஐயமில்லை!

வந்து கொண்டிருக்கும் புதிய அரசியல் அமுலுக்கு வந்தால் காலக்கிரமத்தில், இந்தியக் குடியாட்சி என்பது இந்தி ராஜ்யம்; இந்து ராஜ்யமாகி முடிவில் ஆரிய இராஜ்யமாக அமைந்துவிடும். இந்த பரிணாம முறையை எதிர்பார்த்தே அதற்கேற்றபடி அரசியல் சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. எப்படி எனில்;

இந்தியக் குடியாட்சி என்கிற திரைக்குள் இருக்கும் ஆரிய சாம்ராஜ்யத்திற்கு 'ஜனாதிபதி' என்கிற பேரால் ஒரு 'சர்வாதிகாரி' இருப்பார். இந்தச் சர்வாதிகார ஜனாதிபதியை "மாகாணங்களின் கீழ்ச்சபைகளின் அங்கத்தினர்களும இந்திய யூனியன் கீழ்ச்சபை மேற்சபை அங்கத்தினர்களும் தேர்ந்தெடுப்பார்கள். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியின் உத்தியோக காலம் 5 ஆண்டுகளாகும்" என்று புதிய அரசியல் அமைப்புக் கூறுகிறது.

இந்த ஜனாதிபதியின் சர்வாதிகாரத்திற்கே இந்திய அரசாங்க மொழி நிர்ணயமும் விடப்பட்டிருக்கிறது. இந்திய மொழிப் பிரச்னை பற்றி சுருக்கமாக சொல்லவேண்டுமானால் "இந்திமொழியே இராஜாங்கப் பொதுமொழியாகும்" என்பதுதான். அதாவது;

343—(1) தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்ட இந்தி மொழியே இந்திய யூனியனின் உத்தியோக மொழியாக இருக்கவேண்டும். உத்தியோக காரியங்களுக்காக யூனியன் சர்க்கார் பயன்படுத்தும் எண்களின் வடிவம், சர்வதேசங்களிலும் இப்போது பயன்படுத்தப்படுகிற 1 2 3 4 5 6 7 8 9 10 என்கிற அராபிய எண்களாகவே இருக்கவேண்டும்.

343—(2) மேற்கண்ட 343—(1) ல் என்ன சொல்லியிருந்தாலும் புது அரசியல் அமுலுக்கு வந்து 15 ஆண்டுக் காலத்திற்கு ஆங்கிலமே யூனியனின் எல்லா உத்தியோக காரியங்களுக்கும் தொடர்ந்து உபயோகிக்கப்பட வேண்டும். (அதாவது இப்போது எதற்கெல்லாம் ஆங்கிலம் பயன்படுகிறதோ, அதற்கெல்லாம் ஆங்கிலமே தொடர்ந்து உபயோகிக்கப்படும்)

ஆனால், அந்த 15 ஆண்டுகளுக்கு இடையே ஆங்கிலம் மட்டுமல்ல, குறிப்பிடத்தக்க உத்தியோக காரியங்களுக்கு இந்தியையும், தேவநாகரி எண்களையும் பயன்படுத்தலாமென்று ஜனாதிபதி சர்க்காருக்கு அதிகாரம் அளிக்கலாம்.

343—(3) இந்தப் பிரிவில் என்ன சொல்லியிருந்தாலும் மேலே குறிப்பிட்ட 15 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு சட்டமியற்றி அந்த சட்டத்தில குறிப்பிடக்கூடிய எந்த விஷயத்துக்கும் (a) ஆங்கிலத்தை பயன்படுத்துமாறு யூனியன் பாராளுமன்றம் சட்டம் செய்யலாம். (b) தேவநாகரி எண்களை உபயோகிக்குமாறு சட்டம் செய்யலாம்.

344—(1) புது அரசியல் திட்டம் அமுலுக்கு வந்து 5 ஆண்டு முடிவுடனும், பின்பு 10 ஆண்டுக்குப்பின்னும் ஜனாதிபதி ஒரு கமிஷனை நியமிக்க வேண்டும். இந்தக் கமிஷனுக்கு ஒரு தலைவரும், 8-வது அட்டவணையில் குறிப்பிடப்படும் மொழிகளுக்குப் பிரதிநிதியான உறுப்பினர்களும் நியமிக்கப்படுவார்கள். இந்தக் கமிஷன் பின்பற்ற வேண்டிய நடைமுறை விதிகளையும் ஜனாதிபதியே நிர்ணயிப்பார். 8-வது அட்டவணையில் கண்ட மொழிகளாவன:— (1) அஸ்ஸாமிய மொழி (2) வங்காளி (3) குஜராத்தி (4) இந்தி (5) கன்னடம் (6) காஷ்மீரி (7) மலையாளம் (8) மராத்தி (9) ஒரியா (10) பஞ்சாபி (11) சமஸ்கிருதம் (12) தமிழ் (13) தெலுங்கு (14) உருது ஆகப் பதினான்கு மொழிகளாம்.

344—(2) கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றி ஜனாதிபதிக்கு சிபார்சு செய்வது, அவரால் நியமிக்கப்பட்ட மொழிக் கமிஷனின் வேலையாகும்:-

(a) யூனியன் உத்தியோக காரியங்களுக்கு இந்தி மொழியை படிப்படியாக உபயோகிப்பது.

(b) யூனியன் காரியங்கள் பூராவுக்குமோ, அல்லது சிலவற்றிற்கோ ஆங்கிலம் பயன்படுவதை எவ்வளவு தூரம் குறைக்கலாம் என்பது.

இவைபோல் இன்னும் சில அதிகாரங்களும் இராஜாங்க மொழி நிர்ணயத்திற்காக ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட ஷரத்துக்களை மேற்போக்காகப் பார்த்தால மக்களின் வாக்குரிமைப்படியே இராஜாங்க மொழியும் நிர்ணயம் செய்ய இடமளித்திருப்பதுபோல் தோன்றும். ஆழ்ந்து கவனியாதவர்கள் அவ்விதந்தான் வாதிப்பார்கள். ஆனால், பெரும்பாலோரின் கருத்துப்படி இராஜாங்க மொழியை நிர்ணயிக்கப் போவதுபோல் சடங்குதான் நடக்கப்போகிறது.

மொழி நிர்ணயக் கமிஷனை, தேர்தல்மூலம் ஏற்படுத்தவில்லை. மாறாகத் தனி மனிதர் ஜனாதிபதியின் விருப்பம்போல யாரையாவது 'பினாமி'களைப் பொறுக்கிக் கொள்ளலாம். அது மட்டுமா? அந்தக் கமிஷன், ஆங்கிலத்தை ஒழித்துவிட்டு, அந்த இடத்தில இந்தியை இருத்துவதற்கு ஆலோசனை சொல்லவே அமைக்கப்படுகிறது! ஏன் இந்தக் கமிஷன்

இருக்கவேண்டும்? தன்னுடைய அபிப்பிராயம் எதுவும் சொல்லப் போவதில்லை. மக்களின் பிரதிநிதிகளும் இல்லை. வீண் சடங்கு எதற்கு? ஆரிய மொழியான இந்தியை அரியாசனத்தில் ஏற்றி, ஆரிய ஆதிக்கம் ஏற்படுத்தவே.

புதிய அரசியல் அமைப்பு விதிகளில் இராஜாங்க மொழி பற்றிய ஷரத்துகளை நாம் ஊன்றிக் கவனித்தால் அதிலிருந்து நமக்குப் புலப்படுவது இரண்டே இரண்டு விஷயங்கள் தான். ஒன்று, ஆங்கிலத்தை அடியோடு ஒழித்தாகவேண்டும் என்பது. மற்றொன்று, ஆங்கிலத்தை அகற்றும் போது, அந்த இடத்தை இந்தியைக் கொண்டு நிரப்பிவிடவேண்டும்! இந்த இரண்டு காரியங்களையும்செய்ய மற்ற மொழிக்காரர்களின் மோதுதல் ஏற்படாமல் தந்திரமுறைகள் கையாளப் படவேண்டும். அந்த "தந்திரமுறைகளில்" ஒன்றுதான் 14 மொழிக் காரர்களின் கமிஷன் அமைப்பே தவிர வேறொன்றுமில்லை.

இவ்வளவு பிரயாசையுடன் ஆங்கிலத்தை ஏன் அகற்ற வேண்டும்? அதிலதான் "மர்மம்" இருக்கிறது. ஆங்கிலம் அந்நியமொழி. எனவே, அந்த மொழியை அரசாங்க மொழியாக்குவது இந்திய சுயமரியாதைக் குப்பங்கம் தரும் செயல்! என்று தெளிவில்லாதவர்கள் கூறிவருகின்றனர். இக்கூற்று எவ்வளவுதூரம் பொருந்தும் என்று பார்ப்போம்.

இந்தியைத் தாய்மொழியாகப் பெறுதவர்கள் இவ்வுபகண்டத்தில் பலகோடி எண்ணிக்கையுள்ளனர். அவர்கள் எல்லோருக்குமே, ஆங்கிலம்போலவே இந்தியும் அந்நிய மொழியாகும். இன்னும் சற்று தெளிவுபடுத்தினால் திராவிடமக்களுக்கு "இந்தி" ஆங்கிலத்தைவிட அந்நியமொழியாகும். ஏன் எனில்; ஆங்கிலம் அறிந்தவர்களாவது, நூற்றுக்கு ஒருவர் திராவிடத்தில் இருப்பர். இந்தி கற்றவர்கள் ஆயிரத்தில் ஒருவர்கூட இருக்கமாட்டார்கள். அவ்வளவு பழகிய ஆங்கிலத்தையும் நீக்கிவிட்டு, தாய்மொழியையும் புறக்கணித்து எங்கேயோ கிடந்த இந்தியை அரசாள வைப்பதென்றால், திராவிடர்கள் என்ன கதியடைவார்கள்? இதுதானா சுயராஜ்யம்கிடைத்த லட்சணம்?

இத்தனை கஷ்டங்களும் எதிர்ப்புகளும் இருக்கும்போதே இந்தியைப் பிடிவாதமாகத் திணிக்க, முயல்பவர்கள்யார்? என்று கேட்கநினைக்கலாம். இதைக்கண்டுபிடிப்பது கஷ்டமல்ல, இந்தியை உயர்நிலைக்குக்கொண்டுவர இந்திமொழியாளர் தவிர, வேறுயார் முயற்சிப்பார்கள்? பீகார், ஐக்கிய மாகாணம் ஆகிய இரண்டிலும வசிக்கின்ற இந்திபபித்தர்கள்தான்என்று நாம் கூறவேண்டுமா? இந்தி அரசாங்க மொழியாக மாறினால் இந்திவாலாக்களுக்கு உத்தியோகமும், ஆதிக்கப்பெருக்கமும் ஏற்படும். இந்தியை இப்போதே திணிக்கவில்லையானால், பிற்காலத்தில் முடியவே முடியாது. வீட்டுக்காரன் உறங்குகிற நேரம்தான் திருடர்களுக்கு ஏற்ற நேரம். அதுபோலவே, இவ்வுபகண்டத்து மக்கள் அரசியல் விழிப்படையாத — குருட்டுத்தனமாகத் தலைவரைப்பின்பற்றிக் கொண்டிருக்கிற— இந்த நேரம்தான் இந்தியைத் திணிக்க ஏற்றநேரம். மக்களிடம் உண்மையான அரசியல் அறிவு ஏற்பட்டிருந்தால இந்திப்புரட்டர்களின் "ஜம்பம்" பலிக்குமா? பலிக்காது. எனவே, காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளத் துடிக்கிறார்கள். ✲

கழக வேலைகள்

தூத்துக்குடி, விருதுநகர், புதுக்கோட்டை, ஈரோடு ஆகிய இடங்களில் திராவிட முன்னேற்றக் கழக நிதிக்கென நடைபெற்ற "சந்திரமோகன்" நாடகங்களின் விளைவாக, செலவு நீக்கி மொத்தம் ரூ 9,19—0—8 கிடைத்திருக்கிறது. நாம், எதிர்பார்த்ததைவிட அதிகமான அளவிலேயே, கழக நிதிக்கென நான்கு ஊர்களிலும் பணம கிடைத்திருக்கிறது. இந்தப் பெருமை, நாடகங்களை நடத்தித் தந்த அந்தந்த ஊர் கழகத் தோழர்களையே சாரும்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் என்று நாம் கேட்கவில்லை; பணக்காரர்களின் உலலாசச சோலையாக நமது கழகம் ஆகும்படிவிடக் கூடாது என்ற அடிபபடை எண்ணத்தால்!

எனவே, "காசுகள் தாரீர்!" என்று கைநீட்டிக் கேட்காமல், நாடகம் மூலம் மக்களிடமிருந்து, இத்தொகையை நமது கழக வளர்ச்சி கெனச் சேகரித்துள்ளோம்.

இத்தொகை, நமது ஆக்கவேலைகளை எண்ணிப் பார்க்கும்போது மிகமிகக் குறைவுதான். எனினும் நெஞ்சத்திலே உறுதியிருக்கிறது மக்களின் ஆதரவும் அன்பும் என்றும் நமக்கு இருக்கும என்ற நம்பிக்கை மலர்ந்துள்ளது. எனவே கிடைத்திருக்கும் தொகையை கொண்டு விரைவில் வேண்டி ஏற்பாடுகள் துவக்கப்படும்.

இதுவரையில, கழகத்துக்கென தனியலுவலகம் இல்லாமலிருந்த கிளைக் கழகத்தின் செய்திகள் அடி கடி எட்டுவதில்லை, அதனால் அ காங்கு நடைபெறும் செய்திக கிடைப்பதில்லை என்று கூறப்பட் வந்த குறையைப் போக்கவேண்டி விரைவில் சென்னையில திரா முன்னேற்றக் கழகத்துக்கென ஒ அலுவலகம் நிறுவப்படும்.

அந்த அலுவலகத்திலிருந்தபடி வெளியூர்களிலிருந்துவரும் தோழ களைக் கண்டுபேசித் தகவல்கள் பெ வும், கடித மூலம், முன்னேற் கழகக் காரியங்களைக் கவனித்து பாடுகள் செய்யவும், இன்ன பி பொறுப்புக்களைக் கவனிக்கவுமா வகையில ஒரு காரியதரிசி நியம செய்யப்படுவார். அவரது பொறு அலுவலகத்தைக் கவனித்து கொள்வதோடு, கழக சம்பந்தமா 'ரிகார்டுகள்', கடிதப் போக்கு வ துக்கள் ஆகிய எல்லாவற்றை நிர்வகிப்பதாகவும் இருக்கும்.

கழக அலுவலத்தில ஒரு நிலையம் ஏற்படுத்தவும், திட்டமி பட்டிருக்கிறது. கழக சம்பந்தமா நூல்கள மட்டுமின்றி, பிறமொ நூலகளும், இன்றியமையாத எ ணங்களைத் தரும் புத்தகங்க அறிவு நூலகளும், அங்கு இட பெறும்.

வெளியூர்களிலிருந்து கழக பந்தமாக வரும் பிரச்சாரகர்க கழகத் தோழர்களோ, சென்னை வந்தால் தங்கியிருக்கவும், உ சிக்கபபட்டுள்ள கழக அலுவ தில் வசதிகள் செய்து தர யோசனை செய்யப்பட்டிருக்கிறது

விரைவில், சென்னையில் அ லகம் இருப்பதற்கான இடம் கி கப் பெற்றதும் இத்திட்ட நிறைவேற்றப்படும் என்பதை கத் தோழர்களுக்கு மகிழ்ச்சியு தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒரு அணா!

[அரங்கண்ணல்]

"என்ன சார் வேணும்? சூடா பிரியாணி, ஆம்லெட்........."

ஒரு சிப்பந்தியின் ஆரவாரம்

"வாங்க சார் வாங்க! டேய் துயாவைக் கவனிடா..........." முதலாளியின் வரவேற்புபசாரம்.

"இந்தாப்பா, எவ்வளவு நேரமா உட்கார்ந்திருக்கிறது, 'சாயா'விலே சர்க்கரை இல்லேப்பா!"

காத்திருந்தவரின் ஆத்திரமொழி.

"சேர்சே! சுத்தமோசம் சார். பாருங்களேன் ஒரே ரணகளமாகிரி சாலும் எச்சலும்! நம்ம ஆட்கள் ஓட்டல்னாலே இப்படித்தான்!" வெறுத்துப்போனவரின் சலிப்புப் பேச்சு.

"இரண்டு சாயா! ஒரு ஆம்லெட் ரெடி!"

உள்ளேயிருந்துவரும் உரத்த கூச்சல்.

சந்தைக்கடை போலிருந்தது, 'சாந்தி கபே'! ஆனால் இந்தச் சப்தம் எதுவும் கந்தசாமியின் கவனத்தை இழுத்ததாகத் தெரியவில்லை. மூன்றாவது முறையாகக் கந்தசாமி பார்த்தான் சுவரிலே தொங்கும் விலைப் பட்டியலை! டீ கப் அணா 0—2—0 என்று போட்டிருந்ததைக் கண்டபோது அவனையுமறியாமல் அவன் முகத்தில் புன்சிரிப்பு ஒன்று மின்னி மறைந்தது! அந்த "ணா" வைப் பார்த்ததும் 'புரூப்—பார்க்கும்' புருஷோத்தமன் ஞாபகம் வந்தது போலும்!

"என்ன சார்வேணும்........." சிப்பந்திகேட்டான் அவசரத்துடன். "இன்னைக்கு என்ன பகளை பண்ணியிருப்பான் தெரியுமா?" மெதுவாகச் சொன்னான் கந்தசாமி, "ணா" வையும் 'புரூப்'புருஷோத்தமனையும் நினைத்துக்கொண்டு.

"என்ன சொல்றீங்க. சூடா..." மீண்டும் ஒருகடவை கத்தினான் சிப்பந்தி.

எதையோ நினைத்துக் கொண்டிருந்த கந்தசாமிக்கு சுயநினைவு வந்தது.

"என்னுங்க........."

"வந்து......"

கந்தசாமி, சொல்லும் வரை காத்திருக்கவில்லை சிப்பந்தி, பறந்துவிட்டான்! 'சூடா, பிரியாணி' என்ற சங்கநாதத்துடன்!

கந்தசாமியின் கண் மீண்டும் ஒருமுறை விலைப்பட்டியலைப் பார்த்தது பையைத் தடவிப் பார்த்தான். சப்—எடிட்டர் சாரங்கத்திடம், கெஞ்சி, கூத்தாடி வாங்கிவந்த ஒரு அணா இருக்கிறதோ என்ற சந்தேகம்! பாவம், நாள்முழுதும் எழுத்துக்களைப் பொறுக்கி, தேய்ந்து போகும் அவனுக்கு அப்போது 'அந்த ஒருஅணா'தான் பொக்கிஷம்- சொத்து—பசி போக்கும் 'கடவுள்'!

ஒரு அணா, இருக்கிறது என்ற உறுதி ஏற்பட்டதும், ஒருமுறை சுற்றிப்பார்த்தான் பக்கத்துமேஜையில் ஒரு 'வைரக் கடுக்கனும்' ஒரு 'சில்க் சட்டையும்' வந்து உட்கார்ந்தார்கள்.

'என்னசார் வேணும்......'

'ஒரு சிங்கிள் சாயா!' என்று உத்தரவு போட்டுவிட்டு 'சில்க் சட்டையையும்' வைரக் கடுக்கனை'யும் பார்த்தான்.

அவர்கள் 'ஆர்டர்' கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

"இரண்டு பிளேட் பிரியாணி, இரண்டு ஆம்லெட், ஐஸ் வாட்டர்"

கந்தசாமியின் உள்ளம் ஒரு பெருமூச்சை உதறியது! அவர்களைக் கவனித்தான், ஏதோ பேசிக் கொண்டிருந்தனர், சந்தோஷத்துடன்!

கந்தசாமியின் நினைவு, இறக்கை கட்டிக்கொண்டு பறக்கஆரம்பித்தது. சில்க்சட்டை, வைரக் கடுக்கன் பிரியாணி......அழுக்குதுடை, வயிற்றுப் பசி, ஒரு அணா......

இந்த ஞாபகம் வந்தது, ஆனால் 'ஏன்! என்ற கேள்வி பிறக்கவில்லை 'எல்லாம் அவரவர்கள் வந்தவழி, என்ற பதில் தான் அவனுக்குத் தெரியுமே!

"இந்தா சார்!" வேகமாக டீயை வைத்துவிட்டுப் பறந்தான் சிப்பந்தி, டீயை எடுத்தான் கந்தசாமி அவன் இதயத்தில் என்னென்னவோ எண்ணங்கள் மின்னி மறைந்தன! மீண்டும் வைரக் கடுக்கன், சில்க் சட்டையைப் பார்த்தான்—அப்போது தான் அவர்கள் பிரியாணியை ருசிக்க ஆரம்பித்துக் கொண்டிருந்தார்கள்!

பிரியாணியின் வாசனை கந்தசாமியின் ஆசையைத் தூண்டிவிட்டது.

பி...ரி...யா...ணி எப்போதாவது, ஆறுமாதத்துக்கு ஒரு தடவை கூட, அதை அவன் பெறுவது கடினம்! மாதம் ரூ 40 பெறும் சாதாரண கம்பாசிட்டர் தானே அவன்! எப்படிப் பிரியாணியையும் ஆம்லெட்டையும்பெறமுடியும்! அதிலும் கந்தசாமி ஏகாந்தியல்ல —கருப்பம்மா, கணபதி, அஞ்சு, ஆகிய மூன்று உயிர்களும் அந்தப் '40ல்' வாழ்க்கையை நகர்த்திக்கொண்டிருந்தன! இந்த 'நாற்பது' எட்டு நாளைக்குக் கூட வராது, அவனுக்கு! கருப்பம்மாள்—கணவன் கஷ்டம் தெரிந்தவள் தான், கட்டுச்செட்டாக குடித்தனம் செய்யக்கூடியவள் தான்—என்றாலும் எப்படி 'நாற்பதைக்'கொண்டு 'நான்கு' வயிறு நிரப்ப முடியும்!

ஆகவே, அடிக்கடி அவன்வீட்டில் —வீடா அது? இல்லை! இருட்டுப் பொந்து—சண்டை, அடி, உதை, 'ஐயோ அம்மா' என்ற கூச்சல்கள் எழும்புவதுண்டு!

அன்று காலையிலும் அந்தச் சம்பவம் அங்கு நடைபெற்றிருந்தது!

பல்லை விளக்கிக்கொண்டு 'கருப்பு — கொண்டா சாதம்' என்றான் அவன், கண்களை கசக்கிக் கொண்டு நிற்பது! கோபம் அவனையும் மீறிவிட்டது—முடிவு ரகளை—பகல் முழுதும் பட்டினி!

பசி அவனைச் சித்திரவதை செய்தது, பல்லைக் கடித்துக்கொண்டு வேலை செய்தான்—பத்திரிகை அன்று 20 பக்கங்களில் வெளியாக வேண்டும்! மறுநாள் ஜனவரி 26—குடியரசுதினம். எல்லோரும் மலர் போடும்போது, ஓடாத பத்திரிகை என்றாலும், 'பத்திரிகை' என்கிற கவுரவத்தைக் காப்பாற்றவாவது மலர் போட வேண்டாமா! ஆசிரியர் ஆபத்பாந்தவன் பறந்து திரிந்து கொண்டிருந்தார் — குடியரசு மலரைக் கொண்டுவர. மானேஜர் மகா

லிங்கம், இதுதான் வேளை என்று எங்கிருந்தெல்லாமோ விளம்பரங்களைக் கொண்டுவந்து கொட்டி இருந்தார். எனவே, இங்குமங்கும் நகரவோ, நடமாடவோ நேரமும் இல்லை. பசியோவயிற்றைப்பிய்த்துச் சுக்கு நூறுக்குவது போல் கொல்லுகிறது. வேதனையும் வேலையும் அவன் உடலை தாக்கும் சம்மட்டியும் அரிவாளுமாயின!

இங்கிலையில் களைத்துப்போய்த் தான் சப்—எடிடர் சாரங்கத்தைக் கேட்டான் 'ஒரு அணா'! அந்த ஒரு அணாவைத்தான், "சாயா"வுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு, தடவிப் பார்த்தான்.

சாயாவைச் சுவைத்துக்கொண்டிருந்த கந்தசாமியின் இதயத்தில் காலை முதல் மாலைவரை நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சிகளும், 'பேசுவது' போல் இருந்தன.........

சாயாவைக் குடித்தபடியே 'வைரக் கடுக்கன்' மேஜையின் மீது, அவனது கண்கள் மொய்த்தன. ஆம்லெட்டையும் பிரியாணியையும் முடித்துக் கொண்டிருந்தார்கள், உல்லாசப் பேச்சு, வெடிக்கும் சிரிப்பு ஆகியவைகளுடன்!

கந்தசாமியின் மனதில் மீண்டும் 'பிரியாணி' ஆசை எழும்பியது. அவன் கண்கள் 'போர்டை'ப் பார்த்தன. பிரியாணி 0—12—0 'உனக்குக் கிட்டாதப்பா' என்று உபதேசம் செய்வது போலக் கொட்டை எழுத்துக்களில் தெரிந்தது.

"இந்தா, சார். பில்!"

சிப்பந்தி தன் வேலை முடிந்துவிட்டதைக்குறிக்கும் அலட்சியத்துடன் வைத்தான் மேஜையின் மீது! மேலே சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறியின் காற்று 'பில்'லைப் பறக்கடிக்கவே, அது 'வைரக் கடுக்கன்' காலடியில்போய் விழுந்தது! 'சாயா' முடிந்தது—ஆனால் அவன் பசி அடங்க வில்லை! ஒரு 'சிங்கிள்' சாயாவால் முடிந்து விடக் கூடியதா அவன் பசி?

பிரியாணி அவன் ஆசையைத் தூண்டிக் கொண்டேயிருந்தது. பசியும் ஆசையும் போட்டி போட்டுக் கொண்டு அவன் மூளையைச் சுற்றலாயின!

எழுந்திருந்து, வைரக் கடுக்கன் மேஜையருகே சென்று, பறந்துகீழே கிடந்த 'பில்'லை எடுத்தான்! உல்லாச உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த வைரக் கடுக்கனும் சில்க்சட்டையும் அப்போது தான் அவனைப் பார்த்தனர்.

"என்னப்பா"........

"பில்லுங்க!"

'ச்சு' என்று தன் சலிப்பைக் காட்டிக்கொண்டுவைரக்கடுக்கன்குனிந்து மேஜைக்கடியில் கிடந்த பில்லை எடுத்தார் எடுத்து அதைப் பார்த்து கொண்டே அவனிடம் கொடுத்தார்!

'பில்'லை எடுத்துக் கொண்டு, 'இங்கே கழுவவும்' என்று அறிவிப்புப் தொங்கும், தண்ணீர்த் தொட்டியை நோக்கிச் சென்ற, கந்தசாமிக்குத் திடீரென்றுஒருயோசனை உதித்தது—ஒரு நிமிடம் நின்றான்—யோசித்தான்!

"ஒன்றும் தெரிந்து விடாது; இவ்வளவு பேரில் நம்மை எப்படிக்கண்டு பிடிக்க முடியும்" என்ற எண்ணம் எழும்பிற்று. அதுதான் சரி, என்று, பசி, அவனுடைய சபலத்தை அதிகப்படுத்திற்று.

தண்ணீர்த் தொட்டியருகே போடப்பட்டிருந்த மேஜையில உட்கார்ந்தான். அந்த மேஜையைக் கவனிக்கும் சிப்பந்தி, ஆரம்பித்தான் "என்ன சார் வேணும்? பிரியாணி இருக்கு........"

கந்தசாமிக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. ஒரு நிமிடம் பயமும் பசியும் ஓட்டப்பந்தயம் நடத்திப் பார்த்தன அவனுடைய இதயம் என்ற மைதானத்தில்! முடிவு, "அரை பிளேட் பிரியாணி" என்று ஆர்டர். பிரியாணி வந்தது, முடிந்தது. கந்தசாமியின் எதிரில் வைக்கப்பட்ட 'பில' அபாய அறிவிப்புச் செய்வது போல 0—12—0 என்று காட்டிக் கொண்டிருந்தது!

கந்தசாமியின் கைகள் சட்டைப் பைக்குள் சென்றன. ஒரு அணா என்று குறிக்கப்பட்ட, 'பில்' பேசாமல் கிடந்தது!

எழுந்தான்—வைரக் கடுக்கனைத் தாண்டிச் செல்ல வேண்டும். குற்றம் செய்து விட்டாய், என்று சுட்டிக் காட்டுவது போல் கிடந்த பன்னிரண்டணா 'பில்' சட்டைப் பைக்குள் சென்றது. ஓரணா 'பில' கைக்கு வந்தது, வேகமாக எழுந்து முதலாளி மேஜையருகே சென்றான், ஓரணா 'பில்'லை வைத்து விட்டுச் சட்டைப் பைக்குள் கையைவிட்டு அணாவை எடுத்தான்! ஓரணாவும் உடனே வந்தால்தானே......பன்னிரண்டணா 'பில்'லால் மூடப்பட்டு கிடந்தது... அதைச் சரிபடுத்தி, வைப்பதற்குள், வைரக் கடுக்கன் ஜோடிகள் வந்து விட்டனர்! அவர்களைக் கண்டதும் கந்தசாமியின் நெஞ்சு வெகு வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. பையிலிருந்து காசை எடுத்தான்......தயங்கிக் கொண்டு நின்ற கந்தசாமியின் மீது கண் வைத்த முதலாளி காசுவருகிறதா இல்லையா, என்பதைக் கவனிப்பது போல்அவன் பையையே பார்த்துக் கொண்டிருந்தார்!

காசை எடுத்தான்....அதோடு பன்னிரண்டணா பில்லும் தலை நீட்டியது............

"அது, என்னங்க..."

முதலாளியின் குரல்.

"ஒன்றும் இல்லீங்க......"

"என்னமோ, 'பில்' போல இருக்கே."

"இல்லீங்க...அது......"

"இங்கே, எடுங்க......"

கந்தசாமி கலக்கத்தின் உருவாக ஆனான். என்ன செய்வதென்று புரியவில்லை; திகைத்தான், விழித்தான்! முதலாளியின் குரல 'மூர்க்கஸ்தாயி'யிக்குப் போக ஆரம்பித்தது!

'எடுடா கழுதே! எடுக்க மாட்டியா? டேய் கந்தா, இந்தா!" கந்தன்—வேலையாள் — வந்தான். சோதனையிடப்பட்டது. பன்னிரண்டணா பில் அகப்பட்டது, பலியிடப்படும் ஆடுபோல ஆட ஆரம்பித்தது கந்தசாமியின் உடம்பு.

வைரக்கடுக்கன் வந்தார், 'பத்து ரூபாய்' நோட்டுடன்! அவர் 'பில்' முதலாளி மேஜை மீது வைக்கப்பட்டது. முதலாளி ஆரம்பித்தார்.

"பாருங்கசார்! அயோக்கியத்தனத்தை, வெகு தந்திரமா ஏமாற்றப் பார்த்திருக்கிறான் சார்."

"என்னது?"

"பன்னிரண்டணாவுக்கு சாப்பிட்டு, ஓரணா பில் கொடுத்து என்னை ஏமாத்தப் பார்த்திருக்கிறான், சார்?"

"அப்படியா?"

சிப்பந்திகள் விசாரணை ந...

(2-ம் பக்கம் பார்க்க)

அமெரிக்க வாடை!

["உழவன்"]

"என்னப்பா இது, சுயராஜ்யம்? கிராமங்களை நாட்டின் உயிர்நாடி. கிராமத்தொண்டே தேசத்தொண்டு என்றெல்லாம் பேசி ஆளவந்தவர்களுடைய ஆட்சியிலே, நகரங்கள் நாள்தோறும் முன்னேறிக்கொண்டு போகின்றனவே யன்றி, கிராமங்கள் இம்மியளவும் முன்னேறவில்லையே! நகரங்கள் வளம் பெற்றால் தான் கிராமங்கள் வாழ்வு பெறமுடியும் என்று எண்ணிவிட்டார்கள் போலும்"

"சுயராஜ்யமாம்! சுகவாழ்வாம்! யாருக்கு அது? முதலாளிகளுக்கு மட்டுந்தானே! ஏழைத் தொழிலாளியின் வாழ்வில் இன்பம் பிறப்பது எந்நாள்? முதலாளிகள் சுகமாக வாழ்ந்தால்தான் தொழிலாளிகள் சுகம்பெற முடியும் என்று முடிவு கட்டிவிட்டார்கள் போலும்!"

நாடெங்கும் இன்று இத்தகைய இதய கீதங்கள் எதிரொலிக்கின்றன! எல்லா இடங்களிலும் பரந்து கிடக்கின்றன!

நகரம்—கிராமம்

முதலாளி—தொழிலாளி

இவை ஏகாதிபத்தியப் படைப்பு வினோதங்கள்! இவற்றுக்கிடையே எத்தனை ஏணி வைத்தாலும் எட்டாத உயரம் இருக்கிறது. இந்த வெளி எவ்வளவுக்கெவ்வளவு குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு உண்மையான குடி அரசு உதிக்கும். குடி அரசிலிருந்து சமதர்ம அரசு தோன்றும். அதிலிருந்து பொதுவுடைமை அரசு பிறக்கும். அந்த அரசில் இந்த இடைவெளி அறவே இருக்காது.

ஆனால் ஏகாதிபத்தியத்தின் உயிர் இந்த இடைவெளி உலகெங்கும் குறையாமல் பாதுகாப்பதில் தான் இருக்கிறது. இந்திய உபகண்டத்தைப் பொறுத்தமட்டில், இந்தப் பணியைச் செவ்வனே செய்துவந்த வெள்ளை ஏகாதிபத்தியம், அந்த வேலையும் நாமில்லாவிட்டாலும் தொடர்ந்து நடைபெறும் என்ற நம்பிக்கையுடன் 1947ல் அதிகாரத்தை மாற்றிக்கொடுத்தது!

அந்த நம்பிக்கை வீணாகவில்லை. 1950 ஜனவரி 26 முதல நடைமுறையில் வரும் புதிய குடியரசில் உள்ள சட்டதிட்டங்கள் அவர்களின் நெஞ்சில் பால் வார்க்கும்.

"பலம் பொருந்திய மத்திய அரசாங்கமே முதலில். அதன் பின்னரே மற்றப் பிரச்சினைகள்" என்ற அடிப்படையிலேயே புதிய அரசியல் மாளிகை கட்டப்பட்டிருக்கிறது. கிராமங்களோ, தொழிலாளியோ முன்னேற முடியும் என்பதற்குரிய அறிகுறியே காணப்படவில்லை.

சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பின் நகரங்கள் நவீன விஞ்ஞான சாதனங்களைக் கைக்கொண்டு ஆயிரம் மடங்கு முன்னேறும்பொழுது, கிராமங்களிலே மின்சார விளக்கு மினுக்கிடலாம்.

முதலாளி நூற்றுக்கணக்கான கார்களுடன் கோடிக்கணக்கான பண மூட்டைகளுடன், பல மாட மாளிகைகளுக்கு உடைமையாளராய் வாழும்போது தொழிலாளி ஒரு சிறு வீட்டில் வசிக்கும் அளவுக்கு முன்னேறலாம்.

வெளிப்பார்வைக்கு இங்கு தொழிலாளி நலவாழ்வு பெற்றுவிட்டது போலவும் தோற்றமளிக்கும். ஆனால் அந்த நிலையில் கிராமங்களோடு நகரங்களையும், தொழிலாளியோடு முதலாளியையும் ஒப்பு நோக்கினால் அகண்ட இடைவெளி சற்றும் குறைந்ததாகக் காணப்படாது. கிராமங்களும் தொழிலாளியும் குறைந்த பட்ச எல்லையை அடையுமுன், நகரமும் முதலாளிகளும் உயர்ந்த பட்ச எல்லையிலே உலாவுவார்கள். அப்போதும் நகரங்களின் கவர்ச்சிகரமான உச்சநிலை கிராமங்களிலே அமைதியை ஊட்டாது. முதலாளியின் கற்பனைக் கெட்டாத ஏற்றம் தொழிலாளியின் மனதில் புயலைக் கிளப்பாமலிராது. அங்கே பிரச்னைகள் தீர்ந்துவிட்டதாகவோ, அமைதிக்கு அடிகோலிவிட்டதாகவோ அர்த்தமில்லை.

இன்று நமது தேசிய வீரர்களின் கண்களுக்கு கந்தர்வலோகமாய் காட்சியளிக்கும் அமெரிக்காவிலே இதே நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. அங்கு சாதாரணத் தொழிலாளியின் வாழ்க்கை, நமது நாட்டுத் தொழிலாளியின் வாழ்க்கைத் தரத்தைவிட எவ்வளவோ உயர்ந்திருக்கிறது என்பது உண்மையே. ஒவ்வொரு தொழிலாளியும் மின்சாரவிளக்குப் போட்ட வீட்டில் வாழமுடிகிறது. தொழிற்சாலைக்கும் போகச் சொந்தத்தில் கார் வைத்துக்கொள்ள முடிகிறது. ஆம். ஆனால் அதைவிட ஆயிரம் மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது அமெரிக்க முதலாளிகளின் வாழ்க்கைத் தரம்.

இதனால் அங்கு அமைதி ஏற்பட்டுவிடவில்லை. தொழிலாளியின் நெஞ்சில் பொங்கும்கொந்தளிப்பு அடங்கிவிடவில்லை. அவர்களின்பெருமூச்சுப் புயலாக மாறும் அபாயம் நீங்கிவிடவில்லை. போராட்டங்களும், யுத்த பீதியும் அங்கு நித்திய நிகழ்ச்சிகளாகிவிட்டன. சாந்தி: அமைதி என்பதெல்லாம் அங்கு விலைபோகாச் சரக்குகள்.

சமீபத்தில் அமெரிக்காவில் ஓர் ஏழைக்கணவனும்மனைவியும் தெருத்தெருவாய் அலைந்தும் வேலை கிடைக்காததால் தமது ஏழு பிள்ளைகளை விலைகூறி விற்றனர் என்றசெய்தியை ஏடுகளில் பார்த்தோம்.

வறுமையால்வாடிய ஒருதாய், தன் இரண்டு குழந்தைகளைப பட்டினிப் போட்டுக் கொன்றாள் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கூண்டிலேறிக் கண்ணீர், வடித்தாள் என்ற செய்தி வந்தது. இதுவும் அமெரிக்காவில்தான்.

நமது இந்தியநாட்டு முதலமைச்சர் நேரு அமெரிக்கா சென்றிருந்தபோது, அவரை வரவேற்கவிருந்த நகரசபை மாளிகையின் முன்னால், நியூயார்க் நகரசுத்தித் தொழிலாளர்கள், கூலி உயர்வு வேண்டி, வேலை நிறுத்தம்செய்து ஆர்ப்பரித்தார்கள் என்ற செய்தி வெளிவந்தது நினைவு இருக்கலாம்.

வளமையின் மத்தியிலே வறுமை! தொழில்வளத்தின்மத்தியிலேவேலையில்லாத திண்டாட்டம்! செல்வத்

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram,